விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 ஆவணி 28 திங்கட்கிழமை (13.09.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 268

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

## இலங்கைக்கு எதிரான பிரேரணைகள் ஐ.நாவில் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்பு

### எதிர்க்கட்சி எம்.பி லக்ஸ்மன் கிரியெல்ல ஆரூடம்



(கொழும்பு)
ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கைக்கு வழங்கிய காலஅவகாசத்தை அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை என எதிர்க்கட்சிபாராளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார். 15

## கொரோனாவால் கர்ப்பவதி மரணம்

### யாழில் தொடரும் சோகம்

(யாழ்ப்பாணம்)
கொரோனாத் தொற்றுக்கு இலக்காகி கர்ப்பவதிப் பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார். இதில் நாவாந்துறையைச் சேர்ந்த 15

## நாட்டில் நேற்று 2,641 பேருக்கு கொரோனா

(கொழும்பு)
கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 2,641 பேர் நேற்று அடை 15

# ஐ.நா கூட்டத்தொடர் இன்று ஆரம்பம்!

## இலங்கை தொடர்பான அறிக்கை ஆணையாளரால் இன்று வெளியிடப்படும்

*(ஜெனிவா)*
**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடர் இன்று ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ளது.**
**முதலாவது தினத்திலேயே இலங்கை தொடர்பான மனித உரிமை ஆணையாளரின் அறிக்கையை முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**
*(15ஆம் பக்கம் பார்க்க)*

UNHRC

## கொரோனாவால் 144 பேர் பலி

(கொழும்பு)
நாட்டில் கொரோனாத் தொற்றால் 15

## வவுனியாவில் கொரோனாவால் கடந்த 11 நாட்களில் 63 பேர் உயிரிழப்பு

### 1,651 பேருக்கு தொற்று

**(வவுனியா)**
**வவுனியா மாவட்டத்தில் கடந்த 11 நாட்களில் ஆயிரத்து 651 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 63 பேர் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுவீதம் நாளாந்தம் அதிகரித்து செல்கின்றது.
குறிப்பாக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து 11 ஆம் திகதி வரை 1,651 பேர் கோவிட் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளதுடன், 63 பேர் 15

## பொம்மைவெளியில் விபத்து; குடும்பஸ்தர் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
பொம்மைவெளியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.
துவிச்சக்கரவண்டியில் பால் வியாபாரம் செய்துவந்த அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சாந்தகுணமூர்த்தி (வயது-67) என்பவரே 15

## வல்வையில் குடும்பஸ்தர் குத்திக்கொலை



தப்பித்த மற்றைய நபரும் திருமலையில் நேற்று கைது

6ஆம் பக்கம் பார்க்க

## கோவிட்டால் இறப்பவர்களின் தகனச் செலவை அரசு ஏற்கும்

(கொழும்பு)
இலங்கையில் கோவிட் வைரஸ் தொற்றால் உயிரிழப்பவர்களை தகனம் செய்வதற்கான செலவை அரசாங்கம் ஏற்க 15

## மயங்கி விழுந்த குடும்பப் பெண் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)
ஆலயத்துக்குச்சென்று வழிபாட்டில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென மயங்கிவிழுந்த குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார். 15

## பேரவையின் தீர்மானங்கள் இலங்கையை தனிமைப்படுத்துவதாக அமைந்துவிடக்கூடாது

### ஐ.நாவுக்கு இலங்கை அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)
பொறுப்புக்கூறலை கட்டியெழுப்புவதில் இலங்கை இதயசுத்தியுடன் செயற்படுகிறது.
இந்த நிலையில் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் உறுதியானதும் தொடர்ச்சியானதுமான முன்னேற்றம் காணப்பட்டபோதிலும் பேரவையின் செயற்பாடுகளும் தீர்மானங்களும் இலங்கையை தனிமைப்படுத்துவதாக அமையக்கூடாது என ஜெனிவாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.
ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத் தொடர் இன்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பிக்கப்படவுள்ளது. 15

## வடக்கில் 5 பேர் கோவிட்டால் மரணம்

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணத்தில் இருவர் மற்றும் கிளிநொச்சியில் இருவர், புதுக்குடியிருப்பில் ஒருவர் என வடக்கில் 5 பேர் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் உயிரிழந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
யாழ்.போதனா வைத்தியசாலையில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் குறித்த 15

# கணவன் உயிரிழந்ததையடுத்து மனைவி, மகள் மரணம்

## பரிசோதனையில் கொரோனா உறுதி

(புத்தளம்)

புத்தளத்தில் கணவன் உயிரிழந்ததைத் தொடர்ந்து அடுத்தடுத்து மனைவி மற்றும் மகள் உயிரிழந்த நிலையில், கணவனின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது.

வேப்பமடு பிரதேசத்திலுள்ள மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்ட நான்கு பிள்ளைகளின் தந்தையான முஹம்மட் நிஸ்தார் (வயது -56) என்பவரின் சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

புத்தளம் மாவட்ட மற்றும் நீதவான் நீதிமன்ற நீதவான் அசேல டி சில்வா முன்னிலையில் நேற்று காலை சடலம் தோண்டப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை தனது வீட்டில் காலமான குறித்த நபர், அன்றைய தினமே வேப்பமடு பிரதேசத்திலுள்ள முஸ்லிம் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளார்.

எனினும், குறித்த நபர் உயிரிழந்து இரு நாட்களின் பின்னர் 6ஆம் திகதி காலை அவரது மனைவி சித்தி அஜீபாவும் (வயது -51) மற்றும் அவரது மகள் பாத்திமா சஹ்ரானா (வயது -37) குறித்த தினத்தின் நண்பகல் வேளையிலும் அடுத்தடுத்து உயிரிழந்துள்ளனர்.


ஒரே நாளில் உயிரிழந்த தாய் மற்றும் மகள் ஆகிய இருவரினதும் ஜனாஸாக்கள் புத்தளம் தள வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டு பிசிஆர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோது இருவருக்கும் கோவிட் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், 4ஆம் திகதி உயிரிழந்த முஹம்மட் நிஸ்தாருக்கு (வயது - 56) கோவிட் தொற்று இருக்கலாம் என தாம் சந்தேகிப்பதாக சுகாதாரப்பிரிவினர் புத்தளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்த நிலையிலேயே சடலம் தோண்டியெடுக்கப்பட்டுள்ளது. (ம-03)

# சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தில்

## ஒரு கிலோ மஞ்சள் பருப்பு ரூ. 300

## ஒரு கிலோ சீனி ரூ. 200



(யாழ்ப்பாணம்)

சங்கானை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தில் ஒரு கிலோ சீனி200 ரூபாய்க்கும் ஒரு கிலோ மஞ்சள் பருப்பு 300 ரூபாய்க்கு விற்கப்படுவது தொடர்பில் பொது மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இது தொடர்பில் பாவனையாளர் அதிகார சபை நடவடிக்கை எடுக்குமா? என கேள்வி எழுப்பியுள்ளனர்.

சங்கானை ஜே- 171 கிராம சேவையாளர் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட பொதியில் மோசடி இடம்பெற்றுள்ளது.

சங்கானை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் சிட்டையின் அடிப்படையில் 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான பொருட்கள் கொண்ட பொதி வழங்கப்பட்டுள்ளது.

அதனை அப்பகுதி கிராம சேவையாளர் தனிமைப்படுத்தப்பட்டிருந்த குடும்பம் ஒன்றுக்கு வழங்கி இருந்தார்.

அதனுள் இருந்த பொருட்களின் விலைகள் சாதாரண கடைகளின் விலைகளைவிட அதிக விலைகளில் காணப்படுகின்றன. சாதாரண கடைகளில் மஞ்சள் பருப்பு அதிகபட்ச விற்பனை விலையாக 240 ரூபாயாக உள்ளபோது, சிட்டையில் 300 ரூபாய் போடப்பட்டுள்ளது. அதேவேளை சீனியின் அதிகபட்ச விலை 125 ரூபாயாக உள்ள போது சிட்டையில் 200 ரூபாய் போடப்பட்டுள்ளது. அவ்வாறாக பொருட்களின் விலைகளில் அதிகரிப்பு செய்யப்பட்டு மோசடி இடம்பெற்றுள்ளது. இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்க வேண்டும் எனப் பாதிக்கப்பட்டவர் கோரியுள்ளார்.

அதேவேளை யாழ்.மாவட்ட செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய பாவனையாளர் அதிகார சபையினர் அதிக விலைகளுக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். அந்நிலையிலையே சங்கானை பல நோக்கு கூட்டுறவுச் சங்க சிட்டையில் பொருட்களுக்கு அதிக விலைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-03,18)

# சர்வதேச சந்தையிலிருந்து ரூ. 50 ஆயிரம் கோடி கடன் பெற தீர்மானம்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் கடுமையான நிதி நெருக்கடியை சமாளிக்க சர்வதேச சந்தையில் இருந்து 250 கோடி அமெரிக்க டொலர் (கிட்டத்தட்ட 50,000 கோடி ரூபாய்) கடனை அவசரமாகப் பெற எரிசக்தி அமைச்சு முடிவு செய்துள்ளது.

அமெரிக்காவை தளமாகக் கொண்ட கான்செப்ட் குளோபல் என்ற நிதி நிறுவனத்திடமிருந்து கடன் பெற அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. (ம-03)

# நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு 3ஆம் கட்ட தடுப்பு அத்தியாவசியமானது

## விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா

(கொழும்பு)

புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய், நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்ட நோய் எதிர்ப்பு சக்தி குறைவானவர்களுக்கு எந்தவொரு தடுப்பூசியையும் முதற் கட்டமாக பெற்றுக் கொண்டதன் பின்னர், மூன்றாவது தடுப்பூசியையும் வழங்க வேண்டியது அத்தியாவசியமானதாகும் என்று நோய் எதிர்ப்பு தொடர்பான விசேட வைத்திய நிபுணர் ரஜீவ டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெளிவுபடுத்துகையில்,

சில நோயாளர்களுக்கு அவர்களது உடலில் காணப்படுகின்ற நாட்பட்ட நோய் நிலைமைகளால் நோய் எதிர்ப்பு சக்தி உருவாகாது. புற்றுநோய், தீவிர எச்.ஐ.வி. நோய், நீரிழிவு உள்ளிட்ட பாரதூரமான நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் இதில் உள்ளடங்குகின்றனர்.

எனவே இவ்வாறானவர்கள் எந்தவொரு தடுப்பூசியையேனும் இரு கட்டங்களாகவும் பெற்றுக் கொண்டதன் பின்னர் மூன்றாம் கட்ட தடுப்பூசியையும் பெற்றுக் கொள்வது அத்தியாவசியமானதாகும். அஸ்ட்ராசெனகா, மொடர்னா மற்றும் பைஸர் ஆகியவை மூன்றாம் கட்டமாக வழங்குவதற்கு பொருத்தமான தடுப்பூசிகள் ஆகும்.

எவ்வாறிருப்பினும் 6 மாதங்களின் பின்னர் இவர்களுக்கும் முதல் இரண்டு கட்டங்களாக பெற்றுக் கொண்ட அதே தடுப்பூசியை அல்லது பைஸர், மொடர்னா மற்றும் அஸ்ட்ராசெனகா ஆகியவற்றில் ஏதேனுமொன்றை மூன்றாம் கட்டமாக வழங்குமாறும் பரிந்துரைக்கின்றோம் என்றார். (ம-03)


# கண்ணீர் அஞ்சலி

செல்லத்துரை சுப்பிரமணியம் J.P



அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2021) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் : 07.10.1937

மறைவு : 10.09.2021

தயா அச்சகம், தயா வெளியீடு

இல. 150 (92), நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தயாபரன் குடும்பத்தினர்



# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் உப அதிபர்

திருமதி தயாபாலினி திருலிங்கம்

அவர்களின் அன்பு மகள்

செல்வி தி. சாருகா

( யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவி - முதலாம் வருடம் )



மலர்வு : 1999.12.31 உதிர்வு : 2021.09.11

அவர்களின் மறைவுச் செய்திகேட்டு மிகுந்த வேதனை அடைகின்றோம். அன்னாரின் இழப்பினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்

யா / சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி


# வவுனியாவில் 32 பேர் உட்பட வடக்கில் 69 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)

வவுனியாவில் 32 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் நேற்று 69 பேருக்கு பிசிஆர் பரிசோதனைகள் மூலம் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடத்தில் வடக்கு மாகாணத்தினைச் சேர்ந்த 324 பேருக்கு நேற்று பிசிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களில் உயிரிழந்த நால்வருக்கும் கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இருவர் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள், இருவர் யாழ்ப்பாணத்தினைச் சேர்ந்தவர்கள்.

**வவுனியா மாவட்டத்தில் 32 பேர்**

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 25 பேர், வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் 07 பேர்.

**யாழ்.மாவட்டத்தில் 24 பேர்**

யாழ்.போதனா வைத்தியசாலையில் 09 பேர், தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 08 பேர், கோப்பாய் பிரதேச வைத்தியசாலையில் 03 பேர், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 02 பேர், நொதேர்ன் சென்ரல் ஹொஸ்பிரலில் ஒருவர், சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்.

**முல்லைத்தீவு மாவட்டத்தில் 06 பேர்**

வெலிஓயா சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 04 பேர், மல்லாவி ஆதார வைத்தியசாலையில் 02 பேர்.

**கிளிநொச்சி மாவட்டத்தில் 07 பேர்**

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் 04 பேர், இரணைமடு விமானப்படை முகாமில் 03 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். (ம-03)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603

021 567 1532

# இலங்கை அரசு ஐ.நா. வில் பதிலளித்த விடயங்கள்

# உள்நாட்டில் செயற்பாட்டு ரீதியாக நடைபெறவில்லை

## இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் சுட்டிக்காட்டு



**(கொழும்பு)**

**ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரிற்கு இலங்கை அரசாங்கம் அளித்துள்ள பதிலளிப்பு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களும் உள்நாட்டில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளும் முற்றிலும் முரணானதாக உள்ளதென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் முன்னாள் ஆணையாளர் அம்பிகா சற்குணநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்தின் நல்லிணக்கம் பொறுப்புக்கூறல் தொடர்பிலான முன்னேற்றங்கள் குறித்த வாய்மூலமான அறிக்கை இன்று ஆரம்பமாகும் ஐ.ந.கூட்டத்தொடரில் வெளியிடவுள்ள நிலையில் இலங்கை அரசாங்கம் கடந்த 27ஆம் திகதி அனுப்பிவைத்துள்ள பதிலளிப்பு அறிக்கையில் உள்ளடக்கியுள்ள விடயங்கள் பற்றிகருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசாங்கம் வெளிப்படையாக அறிக்கையில் கூறிய விடயங்களை உள்நாட்டில் செயற்பாட்டு ரீதியாக முன்னெடுக்கவில்லை. அதேநேரம் அந்த அறிக்கையில் கூறியுள்ள விடயங்கள் சம்பந்தமான கேள்விகள் பல உள்ளன.

குறிப்பாக பயங்கரவாத தடைச் சட்டம் மீளாய்வு செய்யப்படும் என்று கூறப்படுகின்றது. ஆனால் பயங்கரவாதச் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் என்பதே கோரிக்கையாகவுள்ளது.

அதுபோன்று பதிலளிப்பு அறிக்கையில் 'காணாமல் போனவர்கள்' குறிப்பிடப்பட்டுள்ளது. 'வலிந்து' காணாமலாக்கப்பட்டவர்கள் என்று அரசாங்கம் குறிப்பிடவில்லை. அசாதாரண நிலைமைகளின்போது இளைஞர்கள் யுவதிகள் உள்ளிட்டோர் வலிந்தே காணாமலாக்கப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக பார்க்கையில் அரசாங்கம் பதிலளிப்பு அறிக்கையில் குறிப்பிட்ட விடயங்களை செயற்பாட்டு ரீதியாக முன்னெடுக்கவில்லை. ஆகவே அதன் கூற்றுக்கும் செயற்பாட்டுக்கும் இடையில் முரண்பாடுகள் காணப்படுகின்றன.

இதேநேரம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் இருந்து இலங்கையின் பொறுப்புக்கூறலை மீளப்பெற்று பொதுச்சபை ஊடாக பாதுகாப்புச்சபைக்கு நகர்த்தி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லுமாறு வலியுறுத்தப்படுகின்றது. அது இலகுவான காரியம் அல்ல. அதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஆனால் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை விடயம் தொடர்ந்தும் இருப்பதானது சர்தேசத்தின் கவனத்தினைப் பெற்ற விடயமாகவும் தொடர்ச்சியாக உயிர்ப்புடனும் காணப்படுகின்றது.

ஆகவே மனித உரிமைகள் பேரவையில் இவ்விடயத்தினை தொடர்ச்சியாக பேணிவரும் அதேநேரம் நீதியை பெற்றுக் கொள்வதற்கு பொறுப்கூறலுக்கான ஏனைய வழிகளையும் கவனத்தில் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார். (4-5)

# சவால்களுக்கு மத்தியிலேயே ஆளுநர் பதவியை பொறுப்பேற்கிறேன்

## அஜித் நிவாட் கப்ரால்



(கொழும்பு)

நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமைகளால் ஏற்பட்டுள்ள பாரிய சவால்களுக்கு மத்தியில் தான் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை பொறுப்பேற்கவுள்ளேன் என்று நிதி இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், பிரதமர் மகிந்தராஜபக்ஷவும் என்னை மீண்டும் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு கோரியிருந்தனர். நான் அவர்கள் என்மீது கொண்டிருக்கின்ற நம்பிக்கையை கருத்திற்கொண்டு எவ்விதமான தயக்கங்களும் இன்றி அப்பதவியை ஏற்றுக்கொள்வதாக கூறினேன்.

இந்த நிலையில் பெரும்பாலும் எதிர்வரும் வியாழக்கிழமை ஆளுநர் பதவியைப் பொறுப்பேற்க முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

அதேநேரம், அப்பதவியில் எனது செயற்பாடுகளை வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு அனைத்து தரப்பினரதும் ஒத்துழைப்புக்களை எதிர்பார்த்து நிற்கின்றேன்.

மேலும் தற்போது பொருளாதார ரீதியாக நாடு பலத்த நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளது.

இவ்விதமானதொரு தருணத்தில் தான் ஆளுநர் பதவியை நான் பொறுப்பேற்கின்றேன்.

அவ்விதமான சவால்கள் நிறைந்த காலத்தில் இப்பதவியைப் பெற்றுக்கொண்டு மீண்டும் நாட்டை பழைய நிலைக்கு கொண்டு வருவதையே இலக்காக கொண்டுள்ளேன் எனத் தெரிவித்தார். (4-5)

# சதொச ஊடாக ஆடை விநியோகம்

## பந்துல



(கொழும்பு)

சதோச மற்றும் அரச நிறுவனங்களின் ஊடாக ஆடைகளை விற்பனை செய்வதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படுவதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

அங்கு தற்போதுள்ள விலையையும் விட குறைந்த விலைக்கு ஆடைகளை பெற்றுக் கொள்ள முடியுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் இலங்கைக்கான ஆடைத் தேவையில் 100 சதவீதமும் உள்நாட்டு உற்பத்திகளைக் கொண்டு பூரணப்படுத்துவதற்கு முடியும் என்றும் அமைச்சர் கூறினார்.

இதன் காரணமாக உள்ளூர் சந்தையில் ஆடைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுவதற்கு வாய்ப்பில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (4-5)

# அம்பாந்தோட்டை கடற்பரப்பில் நிலநடுக்கம்

(கொழும்பு)

ஹம்பாந்தோட்டையில் இருந்து தென்கிழக்காக 160 கிலோமீற்றர் தூரத்திலுள்ள கடற்பரப்பில் நேற்று நில நடுக்கம் ஏற்பட்டுள்ளது.

4.1மெக்னிடியூட்டில் நில நடுக்கம் பதிவாகியுள்ளதாக புவிச்சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகத்தின் தலைவர் அநுர வல்பொல தெரிவித் தார்.

எவ்வாறிருப்பினும் நில நடுக்கத்தினால் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லையென அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# ராஜபக்ஷக்களின் முறையற்ற நிர்வாகத்தை நாட்டு மக்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்

(கொழும்பு)

ராஜபக்ஷக்களின் முறையற்ற நிர்வாகத்தை நாட்டு மக்கள் இனியாவது விளங்கிக்கொள்ள வேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்கள் விடுதலை முன்னணியின் காரியாலயத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்தியில் கலந்துகொண்டு கருத்துரைக்கையிலேயே அவர் இவ்வாறு தெரவித்தார்.

இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அரசியல்வாதியொருவர் இராஜாங்க அமைச்சு பதவியை துறந்து சுயாதீன மத்திய வங்கியின் ஆளுநராக பதியேற்கவுள்ளார்.

இச்செயற்பாடு சர்வதேசத்தின் மத்தியில் இலங்கையை மென்மேலும் ஏளனப்படுத்தும்.

மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவார்ட் கப்ராலை விட பொருளாதார நிபுணர்கள் நாட்டில் கிடையாதா ?

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிகாலத்தில் இடம் பெற்றதாக குறிப்பிடப்படும் நிதி மோசடிகளுக்கு இவரும் ஒருவகையில் பொறுப்புக்கூற வேண்டும்.

ராஜபக்ஷர்களின் முறையற்ற செயற்பாடுகளை சகித்துக்கொண்டு அடிபணிய முடியாததன் காரணமாகவே திணைக்களங்களின் பணிப்பாளர்கள், நிறுவனங்களின் தலைவர்கள் பதவிவிலகுகிறார்கள் என தெரிவித்தார். (4-5)

# டெஸ்ட் போட்டி ரத்திற்கு ஐ.பி.எல் தொடரே காரணம்





## அடித்து கூறுகிறார் வாகன்

இங்கிலாந்து -இந்தியா இடையேயான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 4 முடிந்துள்ள நிலையில் 2-1 என இந்தியா முன்னிலையில் உள்ள நிலையில், இரு அணிகளுக்கு இடையேயான 5ஆவது டெஸ்ட் ரத்து செய்யப்பட்டதற்கு ஐ.பி.எல் தான் காரணம் என இங்கிலாந்து அணியின் முன்னாள் கப்டனும் கிரிக்கெட் வர்ணணையாளருமான மைக்கேல் வாகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து மைக்கேல் வாகன் ட்விட்டரில் பதிவிட்டதாவது, ஐ.பி.எல் அணிகள் தனிவிமானங்களை ஏற்பாடு செய்கின்றன. ஐக்கிய அரபு அமீரகத்தில் 6 நாட்கள் தனிமைப்படுத்தல் தேவை.

ஐ.பி.எல் தொடர் தொடங்க இன்னும் சொற்ப நாட்களே உள்ளன. எனவே ஐ.பி.எல் தவிர வேறு எந்த காரணத்திற்காகவும் டெஸ்ட் ரத்து செய்யப்பட்டது என்று சொல்லாதீர்கள் என மைக்கேல் வாகன் சாடியுள்ளார்.

இதேவேளை இந்திய அணி வீரர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் எவருக்கும் தொற்று இல்லை.

இதனை மேற்கோள் காட்டியே வாகன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (4-6)

# பொதுநலவாய பளுதூக்கல் வல்லவர் போட்டிக்கு தயாராகும் இலங்கை குழாம்

எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதிமுதல் 24 ஆம் திகதி வரை சிங்கப்பூரில் நடைபெறவுள்ள பொதுநலவாய பளுதூக்கல் வல்லவர் போட்டியில் பங்கேற்கும் இலங்கை குழாம் தற்போது பயிற்சிகளில் ஈடுபட்டு வருவதாக இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

கொழும்பு, கண்டி, குருணாகல், பொலநறுவை, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் இந்த பயிற்சி முகாம் நடைபெற்று வருகிறது. இந்த பயிற்சி முகாமில் சர்வதேச போட்டிகளில் பதக்கங்களை வென்றவர்களும் ஈடுபட்டு வருகின்றனர். 53 பேரைக் கொண்ட இந்த பயிற்சி குழாமில் 13 பேர் விசேட குழாமில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இந்த பொதுநலவாய பளுதூக்கல் வல்லவர் போட்டியையொட்டி, ஆண் , பெண் இருபாலாருக்குமான போட்டிகள், கனிஷ்ட ஆண்கள் மற்றும் கனிஷ்ட பெண்கள் ஆகியோருக்குமான போட்டிகளை நடத்துவதற்கும் இலங்கை பளுதூக்கல் சம்மேளனம் நடவடிக்கை எடுத்து வருகிறது. (4-6)



# அறிமுக போட்டியில் அசத்திய ரொனால்டோ

மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கு மீண்டும் திரும்பியுள்ள கிறிஸ்டியானோ ரொனால்டோ முதல் போட்டியில் இரண்டு கோல்கள் அடித்து அசத்தினார்.

போர்த்துக்கல் நாட்டின் தலை சிறந்த கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இவர் கடந்த 2003-ஆம் ஆண்டு முதல் 2009 -ஆம் ஆண்டு வரை மான்செஸ்டர் யுனைடெட் அணிக்காக விளையாடினார். அதன்பின் ரியல் மாட்ரிட் அணிக்கு மாறினார். அந்த அணிக்காக சுமார் 9 ஆண்டுகள் விளையாடினார். அதன் பின் யுவான்டஸ் அணிக்கு சென்றார்.

தற்போது மீண்டும் மான் செஸ்டர் யுனைடெட் அணிக்கு திரும்பியுள்ளார். நேற்று முன்தினம் நியூகேஸ்டில் அணிக்கெதிராக முதன்முறையாக களம் இறங்கினார். முதல் போட்டியிலேயே இரண்டு கோல்கள் அடித்து அசத்தினார். மான்செஸ்டர் யுனைடெட் 4-1 என வெற்றி பெற்றது. இதில் ரொனால்டோ இரண்டு கோல் கள் அடித்தார். இதன்மூலம் தனது திறமை இன்னும் குறையவில்லை என்பதை நிரூபித்துள்ளார். (4-6)

# இருபது -20 உலகக் கிண்ணம் இலங்கை அணி அறிவிப்பு



எதிர்வரும் ஒக்டோபர் மாதம் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமானில் ஆரம்பமாகவுள்ள 2021 ஐ.சி.சி. ஆண்கள் இருபது-20 உலகக் கிண்ணத்துக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் தேர்வுக்குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 பேர் கொண்ட இந்த அணிக்கு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஒப்புதல் வழங்கியுள்ளார்.

இலங்கை அணி பின்வருமாறு,

தசுன் சானக்க தலைவர்


தனஞ்சய டிசில்வா உப தலைவர்

குசல் ஜனித் பெரேரா, தினேஷ் சந்திமால்,அவிஷ்க பெர்னாண்டோ,பானுக ராஜபக்ஷ,சரித அசலங்க, வனிந்து ஹசரங்க,கமிந்து மெண்டிஸ், சமிக கருணாரத்ன,நுவான் பிரதீப்,துஷ்மந்த சமீர,பிரவீன் ஜயவிக்ரம,லஹிரு மதுசங்க, மகீஷ் தீக்ஷனா

மேலதிக வீரர்கள்

லஹிரு குமார,பினுர பெர்னாண்டோ,அகில தனஞ்சய, புலின தரங்க ஆகியோர் இடம் பெற்றுள்ளனர். (4-6)

# 44 வருட காத்திருப்பு நிறைவு; கிண்ணம் வென்றது பிரிட்டன்



அமெரிக்க ஓபன் இறுதிப் போட்டியில் லெய்லா பெர்னாண்டஸை வீழ்த்தி எம்மா ரடு கானு கிராண்ட்ஸ்லாம் பட்டம் வென்றுள்ளார்.

அமெரிக்க ஓபன் டென்னிஸ் தொடரில் மகளிர்க்கான ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நியூயோர்க்கில் ஆர்தர் ஆஷே அரங்கில் பிரிட்டன் வீராங்கனை எம்மா ரடுகானு மற்றும் கனேடிய வீராங்கனை லெய்லா பெர்னாண்டஸ் ஆகியோருக்கு இடையில் நடைபெற்றது.

இந்த ஆட்டத்தில் 18 வயதான எம்மா ரடுகானு 6-4 6-3 என்ற கணக்கில் 19 வயது கனேடிய வீராங்கனையை தோற்கடித்து சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

இதன் மூலம் எம்மா ரடுகானு பிரிட்டனின் மகளிர்க்கான ஒரு பெரிய கிண்ணத்தின் 44 வருட காத்திருப்பை முடிவுக்கு கொண்டுவந்துள்ளார். (4-6)

## இராசிபலன்

**13.09.2021**
ஆவணி 28, திங்கட்கிழமை
சப்தமி பிற்பகல் 5.37 மணிவரை
அனுசம் முற்பகல் 11.32 மணிவரை
சுபநேரம் 12.03-1.33 மணிவரை
இராகுகாலம் 7.33-9.03 மணிவரை
சந்திராஷ்டமம்: பரணி, கார்த்திகை, வளவன்

**மேஷம்** — உடல் நலனில் கவனம் தேவை, எதிர்பாராத வகையில் சில மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள்.

**ரிஷபம்** — பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், வெளியூர்த்தொடர்புகள் அனுகூலம் தரும், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், அடுத்தவர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கடகம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறலாம், மற்றவர்களின் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தன்னம்பிக்கை துளிர்விடும் நாள்.

**சிம்மம்** — உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு.

**கன்னி** — உயர்வான சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்ல விதமாக நடைபெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**துலாம்** — பொது வாழ்வில் புகழ் கூடும், புத்தி சாதுரியமாக நடந்து காரியம் சாதிப்பீர்கள், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், தேவைகள் பூர்த்தியாகும் நாள்.

**விருச்சிகம்** — ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர் பகை அகலும், போசன சுகமுண்டு.

**தனுசு** — உடல் நலனில் சிறு இடையூறுகள் தோன்றி மறையும், சுப விரயங்கள் கூடும் நாள், செய்தொழிலில் சில மாற்றங்கள் ஏற்படலாம், வழிபாடு வளர்ச்சியைக் கூட்டும்.

**மகரம்** — முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், இலாபகரமான நாள், வியக்கும் செய்திகள் வந்து சேரலாம், பலரது அன்பிற்கு பாத்திரமாவீர்கள்.

**கும்பம்** — வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக்கொள்ள முற்படுவீர்கள், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், செய்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள், போசன நன்மையுண்டு.

**மீனம்** — திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், குடும்பத்தில் நிலவிய குழப்பங்கள் தீரும், கடுமையான எதிர்ப்புக்கள் கூட திடீரென சாதகமாகிவிடும், பயணங்கள் கைகூடும்.

**மனிதனின் உண்மையான மதிப்பு அவன் வழங்குவதில் தான் உள்ளது**

# நாட்டுக்கு அவசியமான புதிய கல்விக் கொள்கை விரைவில்

## கல்வி அமைச்சர் தினேஸ்

**(கொழும்பு)**

**நாட்டுக்கு அவசியமான புதிய தேசிய கல்விக் கொள்கை தயாரிக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.**



பாராளுமன்றத்தில் அண்மையில் நடைபெற்ற கல்வி அமைச்சு சார் ஆலோசனைக் குழுவிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பாடசாலைகளில் நிலவும் அதிபர் பற்றாக்குறைக்கு உரிய நடைமுறையொன்று விரைவில் தயாரிக்கப்பட வேண்டியதன் அவசியம் பற்றியும் இக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆசிரியர் சம்பளப் பிரச்சினையைத் தீர்ப்பது பாரிய சிக்கலாக மாறியுள்ளது எனக் குறிப்பிட்ட இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, ஆசிரியர்களின் பணியிடத் தெரிவு தொடர்பான வேலைத்திட்டம் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்றார்.

கல்வியியற் கல்லூரிகளை பல்கலைக்கழகமாக மாற்றும் திட்டம் நடந்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இலங்கை சட்டத்தை ஒரு பாடமாக பாடசாலைப் பாடத்திட்டத்தில் உள்வாங்குவதற்கான தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை 02 வாரங்களுக்குள் உபகுழுவிடம் சமர்ப்பிக்கப்பட விருப்பதாகவும் குறித்த கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

சட்டத்தை தனியானதொரு பாடமாக அல்லாது குடியியல் கல்வியில் ஒரு பகுதியாக உள்வாங்கப்பட வேண்டும் என ஆலோசனை முன்வைக்கப்பட்டது.

பாடசாலைகளில் இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள பட்டதாரி பயிலுனர்களை நிரந்தரமாக்குவதற்கு உரிய வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் இந்த ஆலோசனைக் குழுவில் கலந்துரையாடப்பட்டது. (4-5)

# காலத்தை இழுத்தடிக்க அரசு முயற்சி-சம்பந்தன்

(திருமலை)

இலங்கை அரசாங்கம் பொறுப்புக்கூறல், நல்லிணக்கத்தினை ஏற்படுத்தல், நீதியை நிலைநாட்டல் ஆகியவற்றுக்கான எவ்விதமான நடவடிக்கைகளையும் செயற்பாட்டு ரீதியாக முன்னெடுக்காது செய்கின்றோம், செய்வோம் என்று கூறி காலத்தினை இழுத்தடிப்பதற்கு முயற்சிக்கின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலைப் பாராளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளை செயற்பாட்டு ரீதியாக முன்னெடுப்பதற்கு எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்காத நிலையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இவ்விடயத்தினை கவனத்தில் கொண்டு தக்க நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் தொடர்பாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை தீர்மானத்தினை நிறைவேற்றியுள்ளது.

அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பல்வேறு வாக்குறுதிகளை அரசாங்கம் வழங்கியுள்ளது.

இருப்பினும் தற்போது வரையில் அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிகளின் பிரகாரம் எவ்விதமான செயற்பாடுகளையும் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை எனத் தெரிவித்தார். (4-5)

# மொடர்னா தடுப்பூசியின் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆய்வறிக்கை இவ்வாரம் வெளியிடப்படும்

(கொழும்பு)

மொடர்னா தடுப்பூசியின் எதிர்ப்பு சக்தி தொடர்பான ஆய்வறிக்கை இவ் வாரத்தில் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மூலக்கூறு உயிரியல்துறை பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

மொடர்னா தடுப்பூசிகளை பெற்றுக்கொண்டவர்களிடம் பெறப்பட்ட மாதிரிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டன என்றும் அந்த ஆய்வு நடவடிக்கைகள் தற்போது இறுதி கட்டத்தை எட்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# கொலைச்சம்பவம் தொடர்பில் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

வல்வெட்டியில் குடும்பத் தகராறு காரணமாக 2 பிள்ளைகளின் தந்தை கத்தியால் குத்திக் கொலை செய்தவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் இருவரில் ஒருவர் 3 வாரங்களின் பின்னர் நேற்று திருகோணமலையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

மற்றையவர் தொடர்ந்து தலைமறைவாகியுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் 17ஆம் திகதி இடம்பெற்ற குறித்த சம்பவத்தில் சுப்பிரமணியம் கிருசாந்தன் (வயது-30) என்ற 2 பிள்ளைகளின் தந்தையே கொலை செய்யப்பட்டார்.

கொலையில் ஈடுபட்டவர்களான இருவர் தலைமறைவாகிய நிலையில் தேடப்பட்டு வந்தனர்.

சந்தேக நபர்களில் ஒருவர் திருகோணமலையில் தலை மறைவாகி உள்ளதாக காங்கேசன்துறை பிராந்தியத்துக்குப் பொறுப்பான சிறப்புக் குற்றத் தடுப்புப் பிரிவினரால் திருகோணமலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு தகவலளிக்கப்பட்டது.

திருகோணமலை பொலிஸார் எடுத்த நடவடிக்கையில் 41 வயதான சந்தேக நபர் நேற்று கைது செய்யப்பட்டார்.

மற்றையவர் தொடர்பில் தகவல் கிடைக்காத நிலையில் தேடப்பட்டு வருகிறார். (7-5-6-33)



சமுர்த்தி அருணலு திட்டத்தின் கீழ் சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களுக்கு கடந்த வியாழக்கிழமை வீட்டுத்தோட்ட பயிர்ச்செய்கைக்கான நடுகைப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி, சாவகச்சேரி மற்றும் வரணி சமுர்த்தி வங்கிகளில் வைத்து பயனாளிகளுக்கு நடுகைப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்: சுபேசன்)

# விசேட நடமாடும் தடுப்பூசி ஏற்றும் நிகழ்ச்சித் திட்டம்

## கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவிப்பு

(கரணவாய்)

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு நடமாடும் சேவைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இது வரை கொவிட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களையும் பெறாதவர்களினை இனங்காணும் முயற்சியாக இன்று முதல் காலையும் மாலையுமாக 6 நாட்களுக்கு தெரிவு செய்யப்பட்ட 12 இடங்களில் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இக்குறிப்பிட்ட இடங்களில் உள்ள வீடுகள் சுகாதாரத்துறை உத்தியோகத்தர்கள், கிராம சேவை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தரிசிப்பு செய்யப்படும் எனவும் பொது மக்கள் இச் சந்தர்ப்பத்தினைப் பயன்படுத்தி இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுப் பயன் பெறுமாறும் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேலும் எதிர்வரும் 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தமது அலுவலகத்தில் தடுப்பூசி வழங்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (7-5-6-60)

| திகதி | நேரம் | தடுப்பூசி ஏற்றும் நிலையம் |
|---|---|---|
| 13.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | ஞானம் விளையாட்டுக் கழகம், துன்னாலை மேற்கு |
| | மதியம் 1.00- மாலை 3.30 | யாக்கரு மழலைகள் முன்பள்ளி |
| 14.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | கலைமகள் முன்பள்ளி, கரணவாய் வடமேற்கு |
| | மதியம் 1.00- மாலை 3.30 | கட்டைவேலி கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகம் |
| 15.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | சமுர்த்தி வங்கி, துன்னாலை |
| | மதியம் 1.00- மாலை 3.30 | கரணவாய் கிழக்கு சிவன் கோயில் |
| 16.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | கம்பர்மலை பாரதி சனசமூக நிலையம் |
| | மதியம் 1.00- மாலை 3.30 | விபுலானந்தா சனசமூக நிலையம், கரணவாய் தெற்கு |
| 17.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | சிவன் கோயில், துன்னாலை தெற்கு |
| | மதியம் 1.00- மாலை 3.30 | கலாசார மண்டபம், உடுப்பிட்டி தெற்கு |
| 18.09.2021 | காலை 8.30- மதியம் 12.00 | கலைவாணி சனசமூக நிலையம், மத்தொணி |
| | மதியம் 1.00- மாலை 3.30 | வதிரி தமிழ் மன்றம் சனசமூக நிலையம், அல்வாய் தெற்கு |

# ‘கைதிகளும் மனிதர்களே’ என்பதை அரசு உறுதிப்படுத்த வேண்டும்

## குரலற்றவர்களின் குரல்

(யாழ்ப்பாணம்)

தேசிய சிறைக்கைதிகள் தினத்தை முன்னிட்டு நேற்றைய தினம் குரலற்றவர்களின் குரலினால் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் கூறியிருப்பதாவது,

நாட்டிலுள்ள 26 சிறைச்சாலைகளில் சுமார் 20 ஆயிரத்து 228 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

உண்மையில் நாட்டினுடைய சிறைக்கட்டமைப்பின் பிரகாரம் சுமார் 12 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்துப் பராமரிக்க முடியும் என சிறைத்துறை தலைமையகம் தெரிவிக்கின்றது.

வளப்பற்றாக்குறைகளை கோடிட்டுக் காட்டிக் கொண்டிருக்கும் சட்டம் மற்றும் நீதித் துறையின் தாமதம் கைதிகளுக்கான நிவாரணத்தைப் பெற்றுக்கொடுப்பதிலிருந்து தூரமாகவே நிற்கிறது.

சட்டத்துறை காரியாலயத்திலும் நீதிமன்றங்களிலும் வழக்குக் கோவைகள் குவிந்து கிடக்கின்றன. வழக்கு நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்படுமென நீதி அமைச்சு தெரிவித்து வருகின்றபோதிலும் பெரும்பாலான வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்படாமல் நீண்டகால தவணைத் திகதியிடப்பட்டு வருவதையே அவதானிக்க முடிகிறது. விசேடமாக, இரண்டு தசாப்த காலங்களுக்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள்.

கொரோனாப் பெருந்தொற்றுக் காரணமாக கடந்த இரண்டு வருடங்களாக நீதிமன்ற நடவடிக்கைகள் சீரான முறையில் இயங்கமுடியாத நிலை தொடர்கிறது.

சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள், தமது சட்டத்தரணிகளை சந்தித்து வழக்கு விடயங்கள் தொடர்பில் பேச முடியாதுள்ளது.

நடைமுறையிலிருந்து வந்த ‘தண்டனைக்கைதிகளுக்கான வீட்டு விடுப்பு (home leave) வழங்கும் செயற்பாடானது இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இவ்வாறானவிடயங்களால் சிறைத்தடுப்பில் உள்ளவர்கள் இயல்புக்கு மாறான உடல், உள நெருக்கீடுகளுக்கு உள்ளாகி வருவதாக கைதிகளின் பெற்றோர், உறவினர்கள் கவலை கொண்டுள்ளனர்.

தொடர் மன அழுத்தமானது வன்முறை, போதைக்கு அடிமைப்படுதல், தற்கொலை எண்ணம் போன்ற விபரீத நிலைக்கு கைதிகளை இட்டுச் செல்லும் அபாயம் ஏற்படலாம் ‘கைதிகளும் மனிதர்களே’ என்பதற்கிணங்க அவர்களது வாழ்வுரிமையை உறுதிப்படுத்த வேண்டியது அரசின் தலையாய கடமையாகிறது என்பதை தேசிய சிறைக்கைதிகள் தினத்தில் நினைவூட்டுகின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (7-4)

# அருளாசியுரையும் வேதபாராயணமும்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக இடம்பெற்று வரும் இறை ஆசிவேண்டிய பிரார்த்தனை வரிசையில், நாளை செவ்வாய்கிழமை காலை 6.30 மணிக்கு மீசாலை வடக்கு வேம்பிராய் கானைக்கலட்டி அலாக்கிரக புதவரத விநாயகர் தேவஸ்தான பிரதம குருக்கள் சிவஸ்ரீ தே.கௌரிசங்கரக்குருக்களின் அருளாசி உரையும் வேதபாராயண நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் நேரடி ஒலிபரப்பு நிகழ்வாக இடம்பெறவுள்ளது. (7-5)



கிளிநொச்சி ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் கனடாவில் உள்ள விளையாட்டுக் கழகம் ஒன்றினால் வழங்கப்பட்ட 50 ஆயிரம் ரூபா நிதியில் தேசிய அணிக்கு தெரிவான கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வீராங்கனைகள் மூவருக்கும் கபடிப் பயிற்சிக்குரிய உபகரணங்கள் வழங்கிவைக்கப்பட்டன. (படம்: தேவானந்தன்)

# 30 வயதிற்கும் மேற்பட்டவர்கள் விரைவில் தடுப்பூசியை பெறவும்

## இராணுவத்தளபதி



(கொழும்பு)

30 வயதிற்கும் மேற்பட்டவர்கள் துரிதமாக தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

குறித்த வயது பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளதாக அவர் தெரிவித்தார்.

30 வயதிற்கு மேற்பட்ட 11.4 மில்லியன் பேரை இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட நடவடிக்கையில், இது வரை 10.54 மில்லியன் பேருக்கு மட்டுமே தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி குறிப்பிட்டார். (4-5)

# எரிபொருளை விநியோகிப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை

## எரிசக்தி அமைச்சு



(கொழும்பு)

எரிபொருளை விநியோகப்பதில் பிரச்சினை இல்லை என எரிசக்திஅமைச்சு தெரிவித்துள்ளது.

எரிபொருள் களஞ்சிய சாலை சேவையாளர்களில் ஒரு பகுதியினர் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபடுகின்ற போதும் நாட்டில் எரிபொருளை பகிர்ந்தளிப்பதற்கு எந்தவொரு பிரச்சினையும் இல்லை. இதனால் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படுவதற்கான வாய்ப்பில்லை என்று அமைச்சின்செயலாளர் கேடி. ஆர்.ஒல்கா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் செலவுகளைக் கட்டுப்படுத்துவதற்காக சனிக்கிழமைகளில் எரிபொருளை பகிர்ந்தளிக்கும் நடவடிக்கையை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (4-5)

# இலங்கைக்கான ஆப்கான் தூதுவர் தலிபான்களை அங்கீகரிக்க மறுப்பு



(கொழும்பு)

தலிபான்களின் இடைக்கால அமைச்சரவையை அங்கீகரிக்க இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் மறுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ரப் ஹைதாரி, தலிபான் அரசாங்கம் சட்டவிரோதமானது எனஇலங்கை அரசு மற்றும் கொழும்பிலுள்ள இராஜதந்திர சமூகத்திற்கு கடிதம் ஒன்றின் ஊடாக வலியுறுத்தியுள்ளார்.

மேலும், சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆப்கானிஸ்தான் தூதுவர்கள் யாரும், தலிபான்களின் இடைக்கால அமைச்சரவையை வரவேற்கவில்லை என்றும் தூதுவர் ஹைதாரி இலங்கையிலுள்ள ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ளார்.

அத்துடன் தலிபான் அமைச்சரவை, ஐ.நாவால் பயங்கரவாதிகளாக அடையாளப்படுத்தப்பட்டவர்களை கூட அதன்தலைவராக உள்ளடக்கியுள்ளதுடன் பெண்கள், இஸ்லாமிய குடியரசு அரசாங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் அனைத்து இன, மத மற்றும் சிறுபான்மையினரையும் விலக்கியுள்ளது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (4-5)

# 12 வயதிற்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு இம்மாத இறுதியில் தடுப்பூசி



(கொழும்பு)

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்காக தடுப்பூசி வழக்கும் வேலைத்திட்டம் மூன்று கட்டங்களாக மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாக சிறுவர் நோய் நிபுணர்களின் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

அதன் உறுப்பினராக வைத்திய நிபுணர் ஆர்.எம். சுரன்ன பெரேரா இதனைத் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக நாட்பட்ட நோய்கள் கொண்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படவுள்ளது.

செப்டம்பர் மாத இறுதி வாரத்தில் இருந்து அவர்களுக்கான தடுப்பூசி வழங்கப் படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், சிறுவர்களுக்காக பைசர் தடுப்பூசியை மாத்திரம் பெற்றுக்கொடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (4-5)


# வாழ்வை வளமாக்கும் பூஜை - விரத முறைகள்

## விரதங்கள்



## நவக்கிரக தோஷம் நீக்கும் மகாளய அமாவாசை



விரதங்களும் பண்டிகைகளும் இந்துக்களின் இரண்டு கண்களாக விளங்குகின்றன.

பண்டிகைகள் குறிப்பிட்ட மாதங்களில் திதி அல்லது நட்சத்திரங்களை முதலாகக் கொண்டு கொண்டாடப்பட்டு வருகின்றன.

சூரியன் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு இராசியில் தன் பயணத்தைத் தொடருவார். புரட்டாதி மாதத்தில் அவர் கன்னி இராசியில் செல்வதால் இந்த மாதத்திற்கு கன்னியாமாதம் என்று பெயர்.

### மகாளய பட்சம்

புரட்டாதி மாதம் மகா விஷ்ணுவுக்கு உகந்த மாதமாக கருதப்படுகிறது. புரட்டாதி மாதத்தில்தான் மகாளய அமாவாசை வருகிறது. அன்று பித்ருக்களான நமது மூதாதையர்களுக்கு திதி கொடுப்பது விசேஷம்.

(தொடரும்)


# 45 தடுப்பூசி அட்டைகளுடன் அதிகாரி ஒருவர் கைது

(கொழும்பு)

காலி மாநகர சபையின் சமூக அபிவிருத்தி அதிகாரி ஒருவர் 45 கொவிட்-19 தடுப்பூசி அட்டைகளை வைத் திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் அதிகளவான தடுப்பூசி அட்டைகளை வைத்துள்ளதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டுக்கமைவாகவே இந்த கைது நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டது.

தடுப்பூசிதிட்டத்திற்குப்பிறகு அட்டைகளை ஒப்படைக்க வேண்டியிருந்த போதிலும், அவர் அட்டைகளை ஒப்படைக்காது வைத்திருந்த குற்றச்சாட்டுக்காகவே கைது செய்யப்பட்டுள்ளார். (4-5)

# சுனாமி வருவதாக எண்ணி ஊரை விட்டு ஓடிய மக்கள்



(கொழும்பு)

சுனாமி வரப்போகிறது என்ற வதந்தியை நம்பி அங்குலான கடற்கரை பகுதியில் வாழும் மக்கள் தங்கள் உடைமைகள் மற்றும் வீட்டு உபயோகப் பொருட்களுடன் ஊரை விட்டு ஓடி யுள்ளனர்.

மேலும் நேற்று கடல் சீற்றமாக இருக்குமென்று வானிலை ஆய்வு மையம் அறிவித்தது.

இந்த அறிவிப்பை தவறாக புரிந்து கொண்ட மக்கள் அச்சமடைந்து பதற்றத்திற்குள்ளானதாக அங்குலான மீன்வளச் சங்கத்தின் செயலாளர் சனத் நந்தசிரிதெரிவித்தார்.

பின்னர் பொலிஸார் பொது மக்களிடம் இது தொடர்பான உண்மை நிலையை அறிவித்து மக்களை சீரான நிலைமைக்கு கொண்டு வந்தனர். (4-5)

# தலிபான்களை முன்னுதாரணமாக்கி பயங்கரவாத அமைப்புக்கள் வலுப்பெறும்

(காபூல்)

**ஆப்கானிஸ்தானை தாலிபான்கள் கைப்பற்றியுள்ளதால் உலகின் பிற பகுதிகளில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் துணிவுடன் செயற்படும் ஆபத்து ஏற்பட்டுள்ளதாக ஐ.நா சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.**

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் செய்தியாளர்களை சந்தித்த ஐ.நா. சபையின் பொதுச் செயலர் அன்டோனியோ கூறுகையில், ஆப்கானில் தலிபான் பெற்ற வெற்றியைப் பார்த்து, உலகின் பிற பகுதிகளில் உள்ள பயங்கரவாத அமைப்புகள் துணிவுடன் செயற்படும் ஆபத்து உள்ளது.



உதாரணமாக, ஆபிரிக்காவின் சாஹல் பிராந்தியத்தில் பயங்கரவாத சவாலை எதிர்கொள்ளும் அளவிற்கு அங்கு பாதுகாப்பு கட்டமைப்பு இல்லை. இறப்பை நல்ல விஷயமாக கருதி எந்த சூழலிலும் உயிரைக் கொடுக்கும் கும்பல், அது சிறியதாகவே இருப்பினும், அதன் முன் இராணுவம் கூட நிற்க முடியாது. இதை ஆப்கானிஸ்தான் சம்பவம் உணர்த்தியுள்ளது. ஏழு நாட்களில் ஆப்கானிஸ்தான் இராணுவத்தினர் மாயமாகி விட்டனர். பயங்கரவாதத்திற்கு எதிராக பல நாடுகள் இன்னும் தயாராகவில்லை என்பது கவலை அளிக்கிறது.

அதனால், பயங்கர வாதத்திற்கு எதிரான நாடுகளின் ஒற்றுமை மேலும் வலுப்பெற வேண்டும். ஆப்கான், சர்வதேச உறவுகளில் குறிப்பிடத்தக்க வகையில் பங்கு பெற வேண்டும். அதற்கு தாலிபான்கள் அரசுடன் பேச்சு நடத்துவது தவிர்க்கமுடியாதது மற்றும் இன்றியமையாதது என கூறியுள்ளார். (7-5)

# உயிரிழந்ததாகக் கூறப்பட்ட அல்-கொய்தாத் தலைவர் உயிருடன்?



(காபூல்)

உயிரிழந்து விட்டதாக கூறப்பட்ட அல்-கொய்தாத் தலைவர் அய்மான் அல்-ஜவாஹிரி, இரட்டைக் கோபுர தாக்குதலின் 20 ஆவது ஆண்டு நிறைவு தொடர்பில் நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட ஒரு புதிய காணொளிப் பதிவில் தோன்றியுள்ளார்.

எனினும் 60 நிமிட அந்தக் காணொளிக் காட்சிகள் சமீபத்தியவை தான் என்பது தொடர்பில் தற்சமயம் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

காரணம் அவர் "தலிபான்களின் ஆப்கானிஸ்தான் வெற்றியைப் பற்றி அந்த காணொளியில் குறிப்பிடவில்லை. ஆயினும்கூட, இந்த ஆண்டு ஜனவரி மாதம் சிரியாவில் அல்-கெய்தாவுடன் தொடர்புடைய ஹுர்ராஸ் அல்-டீன் குழு நடத்திய "ஜெருசலேம் யூதமயமாக்கல்" மற்றும் ரஷ்ய இராணுவத் தளத்தின் மீதான தாக்குதல் பற்றி அல்-ஜவாஹிரி பேசியுள்ளார்.

அல்கொய்தாவின் பிரபல தலைவர் ஓசாமா பின் லேடனின் வாரிசான அய்மான் அல்-ஜவாஹிரி 2020 இல் இராணுத்தினர் நடத்திய ஒரு தாக்குதலில் உயிரிழந்தார் என ஊகங்கள் பரவியமை குறிப்பிடத்தக்கது. (7-5)

# பாரதியார் பெயரில் தமிழ் ஆய்விருக்கை

(புதுடெல்லி)

**மகாகவி பாரதியாரின் நூற்றாண்டு நினைவு நாளையொட்டி, ஆண்டு தோறும் செப்டம்பர் 11 ஆம் திகதி மகாகவி நாளாகக் கடைப்பிடிக்கப்படும் என்பன உள்ளிட்ட 14 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அறிவித்தார்.**

**அதன் தொடர்ச்சியாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "உத்தரப்பிரதேச மாநிலம், வாரணாசியில் உள்ள புகழ் பெற்ற பணாரஸ் இந்து பல்கலைக்கழகத்தில் பாரதியார் பெயரில் தமிழ் ஆய்விருக்கை அமைக்கப்படும்.**

**தமிழ் படிக்கவும், தமிழ் ஆய்வு மாணவர்களுக்கும் பாரதி இருக்கை பயன்படும். பாரதியார் நினைவு நூற்றாண்டை ஒட்டி பாரதி இருக்கை அமைக்கப்படுகிறது" என்று தெரிவித்துள்ளார். (7-5)**

# தண்டனை வழங்கிய நீதிபதிகளை தேடும் தலிபான்கள்

(காபூல்)

முந்தைய ஆட்சியில் தங்களுக்கு சிறை தண்டனை வழங்கியதற்காக சித்திரவதை செய்து பழி தீர்க்க சுமார் 200 பெண் நீதிபதிகளை தலிபான்கள் தேடி அலைவதாக வெளியாகி இருக்கும் தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஆப்கானிஸ்தானில் தலிபான்களின் இடைக்கால அரசு அமைந்ததும், நாடு முழுவதும் சிறைச்சாலைகளில் இருந்து ஏராளமான தலிபான்கள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது அவர்கள், தங்களுக்கு தண்டனை வழங்கிய நீதிபதிகளை குறிப்பாக பெண் நீதிபதிகளை பழி தீர்க்க வலை வீசி தேடி வருகின்றனர்.

இதனால், 200இற்கும் மேற்பட்ட பெண் நீதிபதிகள் உயிர் பயத்தில் தலைமறைவு வாழ்க்கை வாழ்ந்து வருவதாக பிரிட்டனின் 'தி இண்டிபென்டண்ட்' செய்திநிறுவனம், தனது செய்தியில் தெரிவித்துள்ளது.

இதற்கிடையே, தலைநகர் காபூலில் நேற்று முன்தினம் தலிபான்களுக்கு ஆதரவாக பெண்கள் நடத்திய பேரணி புகைப்படங்கள் வைரலாகி உள்ளன. தலிபான் கொடியுடன் 'இவர்களால் தான் நாங்கள் பாதுகாப்பாக இருக்கிறோம்' என பல ஆதரவு வாசகங்களுடன் பெண்கள் பேரணியாக சென்றனர்.

அப்பெண்கள் அனைவருமே தலை முதல் கால் வரை ஹிஜாப் போட்டு மூடியபடி சென்றனர். கைகளிலும் கறுப்பு நிற கிளவுஸ் அணிந்திருந்தனர். தலிபான்கள் விதித்த முழு ஆடைக்கட்டுப்பாட்டுடன் பெண்கள் பேரணி சென்றனர். (7-5)

# இரட்டைக் கோபுர தாக்குதல் விசாரணையின் முதல் ஆவணத்தை வெளியிட்ட எஃப்.பி.ஐ

(வோஷிங்டன்)

2001 செப்டம்பர் 11 தாக்குதல்களை முன்னிட்டு சவுதி அரேபியாவினால் கடத்தல்காரர்கள் இருவருக்கு வழங்கப்பட்ட தளவாட ஆதரவு தொடர்பான புதிதாக வகைப்படுத்தப்பட்ட 16 பக்க ஆவணத்தை எஃப்.பி.ஐ. வெளியிட்டுள்ளது.



நேற்று முன்தினம் வெளியிடப்பட்ட இந்த ஆவணம், கடத்தல்காரர்களுக்கு அமெரிக்காவில் உள்ள சவுதிகூட்டாளிகளுடன் இருந்த தொடர்புகளை விவரிக்கிறது.

அமெரிக்காவிற்கு எதிரான செப்டம்பர் 11 பயங்கரவாதத் தாக்குதல்களுடன் தொடர்புடைய சில ஆவணங்களை ஆறு மாதங்களுக்குள் வகைப்படுத்த ஒரு இடைக்கால மதிப்பாய்வைத் தொடங்குமாறு பிடன் முன்பு ஒரு நிர்வாக உத்தரவை வெளியிட்டார்.

அதற்கு அமைவாக வகைப்படுத்தப்பட்ட பல ஆவணங்களின் முதல் தொகுப்பே இவையாகும்.

எனினும் 2001 செப்டெம்பர் 11 தாக்குதலுக்கும் எமக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சவுதி அரேபியா நீண்ட காலமாக மறுத்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது. (7-5)

# அட்லாண்டா மிருகக்காட்சி சாலையில் கொரில்லாக்களுக்கு கொரோனா

(ஜோர்ஜியா)

அட்லாண்டா மிருகக்காட்சி சாலையில் குறைந்தது 13 கொரில்லாக்கள் கொவிட்-19க்கு சாதகமாக சோதனை செய்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இலகுவான இருமல், மூக்கு ஒழுகுதல் மற்றும் பசியின்மை போன்ற அறிகுறிகளை கொரில்லாக்கள் வெளிப்படுத்திய பின்னர் அவற்றின் மாதிரிகள் பெறப்பட்டு சோதனைக்கு அனுப்பப்பட்டன.

அட்லாண்டாவின் விலங்குகள் பராமரிப்பாளர்கள் கொரில்லாக்காளின் நாசி மற்றும் வாய்வழி துடைப்புகளை எடுத்து அவற்றை ஜோர்ஜியா பல்கலைக்கழகத்தில் உள்ள ஏதென்ஸ் கால்நடை நோயறிதல் ஆய்வகத்திற்கு அனுப்பினர்.

இதன் மாதிரி ஆய்வு முடிவுகளிலேயே கொரில்லாக்கள் கொரோனா தொற்றுக்குள்ளாகியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மிருகக்காட்சிசாலையின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில், அதன் விலங்கு பராமரிப்பாளர் குழுவின் உறுப்பினர்களால் கொரில்லாக்களுக்கு வைரஸ் தொற்று பரவியிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மேலும் கொரில்லாக்கள் விரைவில் பூரண குணமடையும் என்றும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (7-5)

# படையினரிடம் கையளித்த எமது பிள்ளைகள் எங்கே?

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கேள்வி

(கிளிநொச்சி)

வடக்கு- கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் மனிதவுரிமை ஆணைக்குழுவிற்கு கடிதம் ஒன்று நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளது.

அக்கடிதத்தினூடாக தெரிய வருவதாவது,

2009 மே இல் யுத்தம் மௌனிக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசும் அரச படைகளும் ஊடகங்கள் வாயிலாகவும் ஒலிபெருக்கி மூலமாகவும் விடுதலைப்புலிகளுடன் தொடர்பைப் பேணியவர்களையும் உறுப்பினர்களாக இருந்தவர்களையும் சரணடையும்படி அறிவித்தனர். அவர்களை தாம் புனர்வாழ்வளித்து விடுதலை செய்வதாக திரும்பத் திரும்ப உறுதிமொழி வழங்கினார்கள்.

அவர்களின் உறுதிமொழியை நம்பிய நாம் எங்கள் உறவுகளை எமது கைகளால் ஒப்படைத்தோம். சிலர் எம் கண் முன்னேயே சரணடைந்தனர். இன்னும் சிலர் குடும்பமாகவே மனைவி, குழந்தைகளுடன் சரணடைந்தனர்.

இப்படிச் சரணடைந்த குடும்பங்களில் 30 இற்கும் மேற்பட்ட கைக்குழந்தைகள், சிறுவர்கள் அடங்குவர். இவர்களுக்கு என்ன நடந்தது? இவர்கள் செய்த குற்றம்தான் என்ன? இவர்களை மீட்க சர்வதேசம் எடுத்த நடவடிக்கை என்ன?

நலன்புரி நிலையங்களிலிருந்தும் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்த வைத்தியசாலைகளிலிருந்தும் விசாரணைக்கெனக் கூட்டிச் செல்லப்பட்டவர்கள் கூட காணாமல் ஆக்கப்பட்டுள்ளனர்.

உண்மையாகவே எமது உறவுகளைத்தேடுவதாக இருந்தால் எமது உறவுகள் சரணடைந்த, கையளிக்கப்பட்ட இடங்களான இராணுவக் காவலரணில் (வட்டுவாகல், முள்ளிவாய்க்கால், புதுமாத்தளன், ஓமந்தை) அந்நேரத்தில் கடமையில் இருந்த இராணுவ அதிகாரிகளை விசாரிப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். அதைவிடுத்து பாதிக்கப்பட்டவர்களை விசாரிப்பதன்மூலம் எதைச் சாதிக்க முடியும்? காலத்தைக் கடத்தவும் எமது துயரைக் கிளறிவேதனைப்படுத்தவும் மட்டுமே முடியும் எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் எமது உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை அறிவதற்காகவே நாம் 1660 நாட்களைக் கடந்தும் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் இறந்தும் தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம்.

நாம் உயிருடனே கையளித்த, சரணடைந்த உறவுகளுக்கு என்ன நடந்தது? என்பதை அறியப் போராடும் எமக்கு உரிய தீர்வு வழங்காது எமது தாய்மாரின் வறுமையைப் பயன்படுத்தி நட்டஈட்டை வழங்கி காணாமல் ஆக்கப்பட்ட விடயத்தை முடிவுக்கு கொண்டுவர முயல்வதுஎவ்வளவு தவறு?

சரியான நீதியின்றி நட்டஈட்டை மட்டும் கொடுப்பதால் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் பிள்ளைகள், சகோதரர்கள் ஆகிய இளம் சந்ததியினரின் உளத்தாக்கங்கள் ஆற்றுப்படுத்தப்படமாட்டாது. அதனாலே இவர்களை தவறான வழிக்கு இட்டுச்செல்வது சமூக விரோதிகளுக்கு சுலபமாகி எமது சமுதாயம் சீரழியும்.

இனியும் எங்கள் மீது OMP வலுக்கட்டாயமாக திணிக்கப்படுவதிலிருந்து எங்களை விடுவித்து OMP ஐ தவிர்த்து சர்வதேச விசாரணையுடன் கூடிய நீதிப்பொறிமுறை ஒன்றை பரிந்துரை செய்து நாம் இறப்பதற்கு முன் நீதியைப் பெற்றுத் தாருங்கள் எனவும் கூறப்பட்டுள்ளது. (7-5-6)

# கிளி. மாவட்டத்திற்கு மேலும் இரு கமநலசேவை நிலையங்கள்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் ஏறத்தாழ 23 ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்பில் விவசாய செய்கைகளில் ஈடுபட்டு வரும் விவசாயிகளின் மற்றும் செய்கையாளர்களுக்கான சேவையை வழங்கும் விதமாக கிளிநொச்சி கமநல சேவை மையம் காணப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த கமநல சேவை நிலைய எல்லைக்குள் காணப்படும் 9 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் இரு கமநல சேவை நிலையங்களை அமைப்பதற்கான அனுமதிகள் கிடைக்கப்பெற்று வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் குமரபுரம், பரந்தன், உமையாள்புரம், ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கோரக்கன்கட்டு ஆகிய 6 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 1883 விவசாய குடும்பங்களுக்கு சேவை வழங்கும் வகையில் பரந்தன் கமநல சேவை நிலையத்தினையும் ஊரியான், முரசுமோட்டை கண்டாவளை ஆகிய 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை உள்ளடக்கிய வகையில் 1443 விவசாய குடும்பங் களுக்கு சேவை வழங்கும் வகையில் கண்டாவளை கமநல சேவை நிலையத்தினையும் அமைப்பதற்கான வேலைத் திட்டங்கள் முன் னெடுக்கப்பட்டுள்ளன. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்கனவே 8 கமநல சேவை நிலையங்கள் உள்ள நிலையில் மேலும் இரு கமநல சேவை நிலையங்கள் அமைப்பதுடன் 10 கமநல சேவை நிலையங்களாக இது அதிகரிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (7-5-6-315)

# 100 வயது மூதாட்டிக்கு தடுப்பூசி வழங்கப்பட்டது



(நெளுக்குளம்)

வயோதிப தாயொருவருக்கு நேற்று முன்தினம் வவுனியா நெடுங்கேணி பகுதியில் நடமாடும் மருத்துவ சேவையினரால் முதலாவது கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

நெடுங்கேணி, மருதோடைக் கிராமத்தில் வசிக்கும் 100 வயது நிரம்பிய அன்னை ஒருவர் கொரோனா தடுப்பூசி போட விரும்புவதாக கூறிய தற்கிணங்க வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினரின் நடமாடும் தடுப்பூசிச்சேவையின் மூலம் முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டது.

இவ்வாறு இந்த வயதிலும் தடுப்பூசி போடவேண்டுமென்று விழிப்புணர்வுடைய ஒருவரிற்கு தடுப்பூசி வழங்கியமையையிட்டு பெருமை கொள்வதாக வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை தெரிவித்துள்ளது. (7-5-6-299)

## சட்டவிரோத

# மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்தி விவசாய நிலங்களை பாதுகாக்குக

### விவசாயிகளும் பொதுமக்களும் கோரிக்கை

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வந்த சட்ட விரோத மணல் அகழ்வுகள் பிரதேச செயலாளரின் முயற்சியால் இராணுவத்தினரின் உதவியுடன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டன.

இந்த நிலையில் தற்போது கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள மருதங்குளம், உடுப்பாற்றுக் கண்டல், உப்பாறு போன்ற பகுதிகளில் தொடர்ந்தும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இரணைமடுக் குளத்தை அண்டிய பகுதிகளிலும் சட்ட விரோத மணல் அகழ்வுகள் இடம்பெறுகின்றன.

மேலும் இந்தப்பகுதிகளில் உள்ளவயல்நிலங்கள், நீர்ப்பாசன வாய்க்கால்கள், கழிவு வாய்க்கால்கள் என்பவற்றில் நாளாந்தம் 60 தொடக்கம் 70 கியூப் மணல் அகழ்ந்தெடுக்கப்பட்டு வெளி இடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது.

குறித்த பகுதியில் சட்ட விரோத மணல் அகழ்வுகளைக் கட்டுப்படுத்தி தமது பயிர்ச்செய்கை நிலங்களை பாதுகாக்க வேண்டும் என பிரதேச விவசாயிகளும் பொது மக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (7-5-6-315)




# நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகளை இணையத்தளத்திலும் செலுத்தலாம்

## தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை

(நெளுக்குளம்)

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் வடபிராந்திய வாடிக்கையாளர்கள் அனைவரும் தங்களது மாதாந்த நீர்ப்பட்டியல் கொடுப்பனவுகள் மற்றும் ஏற்கனவேயுள்ள நீர்ப்பட்டியல் நிலுவைகளை செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தற்போதைய கொரோனா பேரிடர் காலத்தில் நீர்ப்பட்டியல் செலுத்துவதற்காக வரிசையில் நின்று நீங்கள் உங்களது பாதுகாப்பிற்கு தீங்கேற்படாதவாறு வீட்டில் இருந்தவாறே ஒன்லைன் மூலமாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் ஸ்மார்ட் சோன் (Smart Zone waterboard.lk) என்ற இணையத்தளம் மூலமாகவும் மற்றும் ஒன்லைன் மூலமான வங்கிகள், ஒன்லைன் மூலமான தொலைத்தொடர்பு சேவைகள் மற்றும் ஒன்லைன் மூலமான அரச, தனியார் சேவை வழங்குநர்கள் மூலமும் நீங்கள் உங்களது கொடுப்பனவுகளை செலுத்திக்கொள்ள முடியும்.

அத்துடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபையின் வவுனியா, யாழ்ப்பாண காரியாலய காசாளர் பிரிவிலும் தங்களுக்கான கொடுப்பனவுகளை வழமை போன்று மேற்கொள்ள முடியும் என்பதையும் அறிவித்துள்ளார்கள். (7-5-6-299)

# பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைதானவர்களை நிபந்தனை அடிப்படையில் விடுவிக்க ஆராய்வு

(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்களுக்கு தீர்வொன்றை வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் சில சரத்துகளை சீர்மைப்பதற்காக தேசிய பாதுகாப்பு சபையினால் நியமிக்கப்பட்ட குழு தெரிவித்துள்ளது.

இதன்படி, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக வழக்கு தாக்கல் செய்யாது தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய சிபாரிசுகளை முன் வைக்க எதிர்பார்த்துள்ளதாக அந்த குழு அறிவித்துள்ளது.

இது குறித்து அந்த குழுவின் தலைவர், முன்னாள் பிரதம நீதியரசர் அசோக்க டி சில்வா கருத்து வெளியிடுகையில்,

"நாட்டிலுள்ள சிறைகளில் சுமார் 400 பேர் வரையில் இவ்வாறு தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தொடர்பான குற்றச்சாட்டு ஆவணங்களை இன்றைய தினம் சமர்ப்பிக்க மாறு சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கோரியுள்ளதாக" அவர் கூறினார்.

இந்நிலையில், குறித்த சந்தேகநபர்களை நிபந்தனைகளின் அடிப்படையில் விடுதலை செய்ய ஆலோசிக்கப்பட்டு வருவதாக அக் குழு மேலும் தெரிவித்துள்ளது. (4-5)

# 1628 கிலோ மஞ்சளுடன் ஐவர் கைது



(புத்தளம்)

வடமேற்கு கடற்பரப்பில் இலங்கை கடற்படையினர் நடத்திய சிறப்பு நடவடிக்கையில் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 1628 கிலோ கிராம் உலர்ந்த மஞ்சள் மற்றும் மின் பாகங்கள் என்பவை பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அதேநேரம் 05 சந்தேக நபர்களும் இதன்போது கைது செய்யப்பட்டுள்ளதுடன், கடத்தல் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்பட்ட இரு டிங்கு படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் 26 முதல் 45 வயதுக்கு உட்பட்ட கற்பிட்டி மற்றும் பேசாலை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. (4-5)

# 17 வயது சிறுவனை, சி.ஐ.டி விசாரணைக்கு அழைப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள (சிஐடி.) குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தலைமையகத்துக்கு 17 வயது பாடசாலை மாணவன் ஒருவர் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளார்.

முகப்புத்தகத்தில் அவரால் இடப்பட்டதாக கூறப்படும் பதிவொன்று தொடர்பில் வாக்கு மூலம் பெற்றுக்கொள்வதற்காக அவர் இவ்வாறு அழைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குருணாகலை, வாரியபொல - கும்புக்கெட்டே பகுதியைச் சேர்ந்த 17 வயது மாணவன் ஒருவரையே நாளை மறுதினம் சி.ஐ.டி.யில் ஆஜராகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (4-5)

# மேலும் 669 பேர் கைது

(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரப்பகுதியில் மேலும் 669 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 38 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்டோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 69,957 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (4-5)

# 100 மில். பார்வையாளர்களை பெற்ற முதல் இலங்கைப் பாடல்



(கொழும்பு)

இலங்கையின் இசைத்துறையை சர்வதேசத்திற்கு கொண்டு சென்ற இலங்கை பாடகியொஹானிடி சில் வாவின் மெனிகே மகே ஹிதே என்ற பாடல் யூடியூபில் 100 மில்லியன் பார்வைகளை பெற்று சாதனை படைத்துள்ளது.

இந்நாட்டு பாடல் ஒன்று யூ டியூபில் 100 மில்லியன் பார்வைகளை பெற்ற முதல் சந்தர்ப்பம் இதுவென்பது விசேடம்சமாகும்.

தற்போதைய நிலையில் குறித்த பாடல் தமிழ், ஹிந்தி மற்றும் மலையாளம் உள்ளிட்ட பல மொழிகளில் பாடப்பட்டு சமூக வலைத்தளங்களில் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-5)




**ஜீவராஜன்**

பிள்ளைகளுக்கு திருமணம்செய்ய நினைக்கும் பெற்றோர்கள் அவர்களின் ஜாதகத்தை ஆராய்வதற்கு முன்...



அவர்கள் செல்போனை ஆராய்ந்தால் பாதி வேலை மிச்சமாகும்...

**அஜந்தன்**

வெளியே சொன்னால் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என்ற பயத்தில்...



மனதிற்குள்ளே புதைந்து போகிறது முதல் காதல்

**ஆதி**

ஏய்யா, மேனேஜர் கடுப்பாய் இருக்காரு?



ஒன்னுமில்லை, நான் தான் அவருகிட்ட போயி, சார் காலைல தான் ரொம்ப லேட்டா வந்தேன்.. இப்ப போதும் போதுனாச்சும் சீக்கிரமா போறேனேன்னு கேட்டேன்.. அதுக்கு மொறைக்கிறாரு...

**பவுஸ்ரினா**



நூறு பேரின் வாயை மூட முயற்சிப்பதை விட தன் காதுகளை மூடிக்கொள்வது சிறந்தது.

**லோஜி**

நாட்ட மூடச் சொல்லி இனிமேல் கேப்பியா? கேப்பியா ?கேப்பியா?



**யோகவதனி**

சீனாவில் திரையரங்குகள் திறக்க அனுமதி! உலகம் முழுசுமே அவங்க ரிலீஸ் பன்ன படம்தானே ஓடிக்கிட்டு இருக்கு..?



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# மக்களை அடக்க முயற்சித்தால் எதிர்க்க நாம் தயார்

## ரணில் சூளுரை

**(கொழும்பு) அவசரகால சட்டத்தின் கீழ், அரசாங்கம் மக்களை அடக்கும் சரத்துக்களை கொண்டு வருமாக இருந்தால், அதற்கு எதிராக நீதிமன்றத்தை நாட தாம் தயார் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும், முன்னாள் பிரதமருமான ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.**



ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன், ZOOM தொழில்நுட்பத்தின் ஊடாக கலந்துரையாடல்களை நடத்திய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அந்த கலந்துரையாடலில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் பொருளாதாரம் நாளுக்கு நாள் மிகவும் மோசமடைந்து வருவதாகவும் பொருட்களை இறக்குமதி செய்ய வர்த்தகர்களிடம் பணம் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

அவசரகால சட்டத்தின் கீழ், அத்தியாவசிய பொருட்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமாக இருந்தால், அதில் தமக்கு பிரச்சினை கிடையாது

எனினும், இந்த சட்டத்தின் கீழ் மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் விநியோகிக்கப்பட வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

அரிசி தவிர்ந்த ஏனைய அனைத்து பொருட்களும் இறக்குமதி செய்யப்படுவதாக சுட்டிக்காட்டிய அவர், பொருட்களை இறக்குமதி செய்ய வர்த்தகர்களிடம் தற்போது பணம் கிடையாது எனவும் குறிப்பிட்டுள்ளார். (4-5)

# இலங்கையில் சினோபார்ம் தடுப்பூசி தொழிற்சாலை

(கொழும்பு)

சீனாவின் சினோபார்ம் நிறுவனமானது இலங்கையிலும் அதன் தடுப்பூசி தயாரிப்பு தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு அவதானம் செலுத்தியுள்ளது.

சீனாவின் சினோபார்ம் நிறுவனத்தின் தலைவர் லியு ஜின்க்சன் உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் சீனாவுக்கான இலங்கை தூதுவர் கலாநிதி பாலித கோஹென ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இது குறித்து அவதானம் செலுத்தப்பட்டது.




இலங்கை மக்களுக்காக சினோபார்ம் நிறுவனம் தொடர்ந்து தடுப்பூசி வழங்கிவருவதற்கு நன்றி தெரிவித்து ஜனாதிபதி வழங்கிய கடிதத்தையும் தூதுவர் இதன்போது சினோபார்ம் நிறுவன தலைவருக்கு வழங்கினார்.

இந்நிகழ்வில் கருத்து வெளியிட்ட சினோபார்ம் நிறுவன தலைவர், சினோபார்ம் நிறுவனம் இலங்கைக்கு தொடர்ந்து தடுப்பூசிகளை வழங்குமென தெரிவித்தார். (4-5)

# மக்கள் நடமாட்டம் அதிகம்

# தென்னாபிரிக்க திரிபு பரவும் அபாயம்

(கொழும்பு)

கொழும்பு நகரில் கொவிட் மாறுபாடு நிச்சயமாக வரக்கூடும் என கொழும்பு நகர சபையின் பிரதான வைத்திய அதிகாரி ருவன் விஜேமுனி தெரிவித்தார்.

கொவிட் மாறுபாடுகளின் மிகவும் ஆபத்தான தென்னாபிரிக்க மாறுபாடான C.1.2 கொழும்பில் பரவும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டவர்கள் பாரியளவில் நாட்டிற்கு வருவதனால் இந்த ஆபத்தான மாறுபாடு பரவக்கூடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பு நகரில் பொருளாதார ரீதியில் அதிகமான மக்கள் நடமாடுவதால் கொழும்பு நகரத்திற்கு எந்தவொரு மாறுபாடும் நுழையக்கூடும் எனவே மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (4-5)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## வாழ்வைக் கொண்டாடுவோம்

ஒருத்தர் தனியாக உட்கார்ந்து சிரித்துவிட்டு இருக்கின்றார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவரைப் பற்றி என்ன நினைப்போம். நேற்று வரைக்கும் நல்லாத்தானே இருந்தார். இன்றைக்கு என்னவோ ஆகிவிட்டது...அதுதான் இப்படி தனியாக சிரித்துக் கொண்டு இருக்கின்றாரோ என்று நினைப்போம்.

ஆனால்..அவசரப்பட்டு அப்படி ஒரு முடிவுக்கு வந்துவிடுவதும் தவறு. ஏன் என்றால் சில ஞானிகளும் அப்படிச் சிரிப்பது உண்டு. ஜப்பானில் ஹொட்டே என்று ஒரு ஞானி இருந்தார். எப்பவும் சிரித்துக் கொண்டே இருப்பார். வேறு எதுவும் பேச மாட்டார். அவருக்கு சிரிக்கும் புத்தர் என்று பெயர். சீனாவிலே மூன்று ஞானிகள் இருந்தார்கள். மூன்று சிரிக்கும் சந்நியாசிகள் என்றே அவர்களுக்குப் பெயர். ஏன் என்றால் அவர்களுக்கு உண்மையான பெயர் என்ன என்பது யாருக்கும் தெரியாது.

அந்த மூன்று பேரும் என்ன செய்வார்கள் என்றால் எப்பொழுது பார்த்தாலும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள். ஊர் ஊராகப் போவார்கள், சிரிப்பார்கள். இவர்கள் ஏன் சிரிக்கிறார்கள். எதற்குச் சிரிக்கிறார்கள் என்று புரியாமல் சுற்றி நின்று எல்லோரும் வேடிக்கை பார்ப்பார்கள். கொஞ்ச நேரத்தில் அவர்களும் மெதுவாக சிரிக்க ஆரம்பித்து விடுவார்கள். பின்பு அந்த இடம் ஒரே சிரிப்பு மயமாக ஆகிவிடும்.

யாராவது அவர்களிடம் போய் எங்களுக்கு ஏதாவது சொல்லுங்கள் என்று கேட்டால் நாங்கள் உங்களுக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாங்கள் வெறுமனே சிரிக்கின்றோம். இப்பொழுது இந்த சூழ்நிலையை சிரிப்பாக, மகிழ்ச்சியாக மாற்றுகின்றோம். அவ்வளவு தான் என்பார்கள்.

ஒரு தடவை ஒரு கடைத் தெருவில் வந்து நின்று அந்த மூன்று பேரும் சிரித்திருக்கின்றார்கள். கொஞ்ச நேரத்திலே அவர்களைப் பார்த்து எல்லோரும் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். அதற்கு முன்னர் அந்த இடத்திலே நிறைந்து இருந்தது மன இறுக்கம். பணம், பேராசை, ஏமாற்று வேலை இப்பொழுது அந்த இடம் முழுவதும் சிரிப்பும் மகிழ்ச்சியும்.

படிக்காத அந்த மூன்று சந்நியாசிகளும் சீனா முழுவதும் போய் மக்களை மகிழ்ச்சியாக இருக்கும்படி செய்தார்களாம்.

ஒரு கிராமத்திலே அவர்கள் இருக்கும்போது...அந்த மூன்று பேரிலே ஒருத்தர் இறந்து விட்டார். இப்பொழுது எப்படி அவர்கள் சிரிக்கப் போகின்றார்கள் பார்க்கலாம் என்று மக்கள் ஆவலாக அங்கே போய்ப் பார்த்தார்கள்.

அங்கே போய்ப் பார்த்தால்...இறந்து கிடந்த சந்நியாசி உடலைச் சுற்றி ஏனைய இரண்டு பேரும் ஆனந்தமாக ஆடிக் கொண்டிருந்தார்களாம்.

என்ன இது பைத்தியக்காரத்தனம். அவர் இறந்து கிடக்கின்றார் நீங்கள் ஆடிக் கொண்டிருக்கின்றீர்களே? என்று கேட்டிருக்கின்றார்கள். அப்படி இல்லை நாங்கள் மூன்று பேரும் உயிரோடு இருந்த பொழுது யார் முதலில் இறக்கப் போகிறோம் என்று பேசிக் கொள்வோம். இப்பொழுது இவர் அதிலே ஜெயித்துவிட்டார்.

நாங்கள் எப்பவும் சிரித்தே வாழ்ந்தோம். இப்பொழுது எங்கள் நண்பரை எப்படி வழி அனுப்புவது? எப்படி வாழ்ந்தோமோ அப்படித்தானே வழி அனுப்ப வேண்டும். அது தான் சிரித்து, மகிழ்ச்சியாக விடை கொடுக்கின்றோம். நாங்கள் அவர் இறந்ததாகவே நினைக்கவில்லை. வாழ்வுக்கு ஏது சாவு என்றார்களாம். அதற்குப்பின்பு அவரை சுடுகாட்டுக்குக் கொண்டு போவதற்கு முன்னர் குளிப்பாட்ட வேண்டும் என்று மக்கள் சொல்லியிருக்கின்றார்கள்.

அது முடியாது. ஏன் என்றால் எங்கள் நண்பர் தான் இறந்தால் குளிப்பாட்டாமல் அப்படியே இருக்கின்ற ஆடையோடு சிதையிலே வைத்துக் கொளுத்த வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார் என்றார்கள். அப்படியே கொண்டு போய் கொளுத்தியிருக்கின்றார்கள். நெருப்பை வைத்ததும் ஒரு பெரிய ஆச்சரியம். அந்த சிதையில் இருந்து நிறைய வெடிச் சத்தங்கள், வர்ண ஒளிகள், வான வேடிக்கைகள். அந்த சந்நியாசி தான் இறப்பதற்கு முன்னர் தன்னுடைய உடையிலே யாருக்கும் தெரியாமல் பட்டாசுகளையும் மத்தாப்புக்களையும் மறைத்து வைத்திருக்கின்றார். அப்பொழுது மக்கள் அந்த வேடிக்கையை பார்த்து சிரிக்க ஆரம்பித்து விட்டார்களாம். அந்த இரண்டு சந்நியாசிகளோடு சேர்ந்து அவர்களும் ஆட ஆரம்பித்து விட்டார்களாம்.

இறப்பு என்பது உண்மையில் இறப்பு அல்ல. அது புதிய வாழ்வின் ஆரம்பம். அதைக் கொண்டாடி மகிழ வேண்டும். இது ஒரு ஞானியின் கருத்து (ஓஷோ).

இறப்பு வரும்போது அதை மகிழ்ச்சியாக வரவேற்கின்ற மனப்பக்குவம் வந்துவிட்டால்... இறப்புக் கூட தன் கொல்லும்சக்தியை இழந்துவிடும். அதற்குப் பதிலாக நீங்கள் அதைக் கொன்று விடுவீர்கள் என்கின்றார் அவர்.

இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால்.. வாழ்க்கை வாழ்வதற்காக என்று இதுவரை சொல்லிக் கொண்டிருந்தோம். இனிமேல் எப்படிச் சொல்ல வேண்டும் தெரியுமா?

வாழ்க்கை வாழ்வதற்காக மட்டுமல்ல.

வாழ்க்கை வாழ்விப்பதற்காக-கொண்டாடுவதற்காக- இன்று முதல் வாழ்க்கையைக் கொண்டாடக் கற்றுக் கொள்வோம்.

ஒருவர் வந்தார் தலையிலே கட்டுப் போட்டிருந்தார். என்னங்க தலையில் கட்டு என்றேன்? எங்க மனைவி வீட்டிலே வாழைப்பழத்தோல் வழுக்கி கீழே விழுந்து விட்டார்? என்றார். விழுந்தது அவர் தானே. அதற்கு நீங்கள் ஏன் கட்டுப் போட்டிருக்கின்றீர்கள்? என்றேன். அவர் விழுந்ததைப் பார்த்து நான் வாய் விட்டுச் சிரித்து விட்டேன். அதனுடைய பலன் இது என்றார்.




## முட்டாள் பையன்



முட்டாள் பதுங்கி பதுங்கிச்சென்று, குதிரை மீது கண்ணியை வீசினான். அதில் சிக்கிய குதிரை அவனிடம்மன்றாடியது.

"என்னைவிட்டுவிடுங்கள், உனக்கு விசுவாசமாக சேவை செய்கிறேன்,"என்றது.

"உன்னை நான் எப்படி நம்புவது?"என்று முட்டாள்கேட்டான்.

"கிராமத்தின் எல்லைக்கு வந்து, மூன்று முறை விசில் அடித்து, "தவிட்டு நிறக் குதிரையே, வெள்ளைப் புரவியே" இங்கு வந்து என் விருப்பத்தை நிறைவேற்று, என்று கூவினால், நான் வந்து விடுவேன்!" என்றது குதிரை.

நெல் வயலில் வந்து மீண்டும் மேய்வதில்லை என்ற வாக்குறுதி பெற்றுக் கொண்டு, சுந்தரம் அந்தக் குதிரையை விட்டுவிட்டான்.

சுந்தரம் வீட்டுக்குத் திரும்பியதும், "என்ன முட்டாளே, எதையாவது பார்த்தாயா?" என்று சகோதரர்கள் கேலியுடன் கேட்டனர்.

"நான் திருடனைப் பிடித்தேன். அது ஒரு குதிரை. நமது பயிர்களுக்கு இனிமேல் சேதம் விளைவிப்பதில்லைஎன்று வாக்குறுதி தந்த பின், நான் அதனை விட்டு விட்டேன்,"என்றான். சகோதரர்கள் சிரித்தனர்.

"தூங்குமூஞ்சி நல்ல கனவு கண்டிருப்பான்!" என்று கூறிப்பகிடி செய்தனர். ஆனால் அன்றைய இரவுக்குப் பிறகு யாரும் வந்து நெற்பயிரை சேதப்படுத்தவில்லை.

இதற்கு சில நாட்களுக்குப்பிறகு அரசனின் தூதர்கள் நாட்டின் பல் வேறு நகரங்களுக்கும், கிராமங்களுக்கும்சென்று, பின்வரும் செய்தியை அறிவித்தனர். "அரசர் மூன்று நாள்விழா ஒன்று நடத்த ஏற்பாடு செய்துள்ளார். அந்த விழாவுக்கு வருமாறு அழைக்கிறார். (தொடரும்)

# மகாபாரதம்

(182)



யார் எல்லா உயிர்களுக்கும்நாதனாயிருப்பவரிடம் பக்தி செலுத்துகின்றாரோ அவர்கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார்எல்லாக்கர்மங்களையும் கண்ணனிடம் அர்ப்பணம்செய்துவிட்டு அச்சமின்றி இருக்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் உலகங்களைப் படைத்தவரும் சாதுக்களுக்கு நாதரும் யாகங்களால்வழிபடத்தக்கவருமான பிரம்மனை பக்தியுடன் வழிபடுகிறாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார் இந்திரனும், விஷ்ணுவும்,ருத்திரரும் போற்றும் மாகா தேவரான சிவபெருமானை எப்போதும் துதிசெய்கின்றாரோ அவர் கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

யார்கடினமான துன்பத்தை கடக்கத்தக்க இந்த உபதேசத்தை படிக்கின்றாரோ, யார்கேட்கின்றாரோ அவர்கடினமான துன்பங்களைக் கடக்கின்றார்.

தருமா! மனிதன் இவ்வுலகிலும், மேலுலகிலும் கொடுந் துன்பங்களைக்கடத்தற்காகச்செய்யத்தக்க செயல்களில் சிலவற்றை உனக்கு உபதேசித்தேன்.

நீயும் இவ்வாறு நடந்து துன்பங்களைக்களைவாயாக!" என்று கூறி முடித்தார் பிதாமகன்.

**மூடன் தரக் குறைவான வார்த்தையைக் கூறினால்**

தருமர் பீஷ்மரைப் பார்த்து "பிதாமகரே! சாந்தமும் அறிவும் மிக்க ஒருவன், அவையில் மூடனும், அறிவற்றவனுமான ஒருவனால் நிந்திக்கப்பட்டால் என்ன செய்ய வேண்டும்? என வினவ பீஷ்மர் உரைக்கிறார்.

"தருமரே! அறிவு மிக்கவன் எப்போதும் அற்பபுத்தியுள்ளவனின் தரம் கெட்ட சொற்களை பொறுத்துக் கொள்ள வேண்டும்.

ஆத்திரத்துடன் பழிக்கப்படும்மனிதன் பழிக்கும் ஒருவனுடைய புண்ணியத்தைத் தான் அடைந்து, தனது பாவத்தை அவனுக்குக் கொடுத்துத் தன்னைத் தூய்மை செய்து கொள்கிறான்.

இகழ்ச்சி செய்பவனை பொருட்படுத்தக்கூடாது.

(தொடரும்)

நீங்கள் வாழ்வதோடு பிறர் வாழவும் வழிவகை செய்யுங்கள்.

– சர் ரோனல்வெலன்ட் ரேஞ்ச்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வியாபாரத்தில் தர்மம் இருக்க வேண்டும் தர்மத்தில் வியாபாரம் இருக்கக்கூடாது

உலகம் முழுவதையும் உலுக்கும் கொரோனாப் பெருந்தொற்றுப் பற்றிப் பேசாதவர்கள் இல்லை எனலாம்.

தவிர, கொரோனாத் தொற்றுக்கு ஆளானவர்கள் மற்றும் இறந்தவர்கள் என்ற கணக்கெடுப்புகள் நாடளாவியரீதியிலும் உலக அளவிலும் நிரல்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கு மேலாக, கொரோனாத் தொற்றில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்கான தடை மருந்தேற்றலும் நடந்தாகிறது.

இருந்தும் கொரோனாத் தொற்று இன்னமும் நின்றபாடில்லை.

தகவல் தொழில்நுட்பமும் விஞ்ஞான அறிவாற்றலும் மருத்துவ அதிசயங்களும் உச்சமடைந்துள்ள இந்தக் காலகட்டத்தில், கொரோனாத் தொற்று எதற்கானதென்று ஒரு கணம் சிந்திக்காத எவரும் மனிதர்களாக இருக்க முடியாது.

ஆம், கொரோனாத் தொற்றுத் தொடர்பில் ஆற அமர இருந்து சிந்தித்தால், இப்பிரபஞ்சத்தின் தத்துவம் அறியப்படும். இறை செயல் உணரப்படும். அறத்தின் வழியில் வாழவேண்டும் என்ற மெய்ஞ்ஞான அறிவு எய்தப்படும்.

ஆம், இப்பிரபஞ்சத்தின் நிலையாமை பற்றி உலகு வாழ் மக்களுக்கு கொரோனாத் தொற்றினூடாக உபதேசம் செய்யப்படுகிறது.

நீ எதையும் இங்கு கொண்டுவரவில்லை. எதுவும் உன்னால் ஆக்கப்படவும் இல்லை. எல்லாமே இந்த உலகில் கிடைத்தவைதான்.

எனவே நீ எதையும் இழக்கவில்லை என்ற தத்துவ உபதேசம் போதிக்கப்படுகிறது.

இவ் உபதேசம் உணர்த்தப்படுகின்ற காலத்தில் வாழ்கின்ற நாம் ஓர் உண்மையை உணர்ந்தாக வேண்டும்.

அதாவது நாம் செய்கின்ற அத்தனை கருமங்களிலும் தர்மம் பின்பற்றப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் தத்துவமாகும்.

கொரோனாப் பெருந்தொற்று உலகை சுற்றி வளைத்துத் தாக்குதல் நடத்துகின்ற இந்நேரத்தில்கூட, பொருட்களின் விலைகளை உச்சமாக்கி அதிலிருந்து கொள்ளை இலாபம் ஈட்ட நினைக்கின்றோம் என்றால்,

கொரோனாத் தொற்றினூடான கலியுகத்துக் கீதோபதேசம்கூட பயனற்றுப்போயுள்ளதென்றே கூறவேண்டும்.

இங்கு பயனற்றுப் போதல் என்பது இறைவனுக்கோ இயற்கைக்கோ அல்ல.

மாறாக மனித குலத்துக்கு என்பதுதான் உண்மை.

அந்த வகையில் இனிவரும் காலங்களிலேனும் தர்மத்தோடு எங்கள் வாழ்வை அமைப்போம்.

அதிலும் குறிப்பாக வியாபாரத்தில் தர்மத்தைப் பின்பற்றுவோம்.

அதற்கும் அப்பால் சென்று, தர்மத்தில் வியாபாரத்தை இம்மியும் கலக்காமல் பார்த்துக் கொள்வோம்.

இதுவே மனுக்குலம் நிம்மதியாக வாழ்வதற்கான ஒரே மருந்தாகும்.

# ஒரே இரவில் பிள்ளையார் சிலை அந்தோனியார் சிலையாக மாறியது

## மடுவில் பரபரப்பு

(வவுனியா)

மடுவில் பிள்ளையார் சிலை ஒரே இரவில் அந்தோனியார் சிலையாக மாறியுள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மடு - பரப்புக்கடந்தான் வீதியில் மடு தேவாலயத்திலிருந்து நான்கு கிலோ மீற்றர் தூரத்திலிருந்த பிள்ளையார் சிலை ஒன்று மாயமாகியுள்ளதுடன் அதே தினத்தில் குறித்த இடத்தில் அந்தோனியார் சிலை வைக்கப்பட்டுள்ளது.

சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்றுள்ள குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

மடு - பரப்புக்கடந்தான் வீதியில் மடு தேவாலயத்திற்கு அண்மையில் கடந்த 40 வருடங்களுக்கு மேலாக அப்பகுதியில் மரத்தின்கீழ் பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது.

அப்பகுதி காட்டுப் பகுதியென்பதால் மதங்கள் கடந்து அப்பகுதியால் செல்பவர்கள் அப்பகுதியில் இருந்த பிள்ளையார் சிலையை வணங்கிவிட்டு செல்வது வழக்கமென அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில்தான் கடந்த நான்கு வருடங்களுக்கு முன்னர் அப்பகுதியில் சிறிய கோவில் ஒன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்த நிலையில் முதற்கட்டமாக மூலஸ்தானம் அமைக்கப்பட்டு அதற்குள் தற்காலிகமாக பிள்ளையார் சிலை வைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில்தான் குறித்த பகுதியில் உள்ள பிள்ளையார் சிலையை சில விஷமிகள் தூக்கிவிட்டு அந்தோனியார் சிலையை வைத்துள்ளனர். (ஞா-299)

# பட்டா தடம்புரள்வு; இருவர் படுகாயம்

## கொடிகாமத்தில் சம்பவம்

(சாவகச்சேரி)

கொடிகாமம்-பருத்தித்துறை வீதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இடம்பெற்ற விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

பட்டா ரக வாகனம் வேகக்கட்டுப்பாட்டினை இழந்து கொடிகாமம் எருவன் பிள்ளையார் கோவில் பகுதியில் தடம்புரண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதில் பட்டா வாகனத்தில் சென்ற கரம்பைக்குறிச்சி வரணிப் பகுதியைச் சேர்ந்த 28 வயதான இளைஞன் மற்றும் நாவற்காடு வரணிப் பகுதியைச் சேர்ந்த 50 வயதான நபர் ஆகியோர் தலையில் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். (ஞா-30)

# ஹெரோயினுடன் துன்னாலையில் இருவர் கைது

(கரணவாய்)

நெல்லியடி பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இரண்டு இளைஞர்கள் ஹெரோயின் போதைப் பொருள் பைகளுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

துன்னாலை பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது போதைப்பொருள் பைகளுடன் இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். (ஞா-60)

## மருத்துவக் குறிப்பு

கொத்தமல்லிக்கீரையை பசுமையாக வாங்கி இரண்டொன்றாகக் கிள்ளி நெய்யில்வதக்கி சூடான சாதத்தில் சாப்பிட இரும்புச்சத்தும் இரத்தவிருத்தியும் அடையும்.

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## மனிதனும் இறைவனும்



ஒருவழியில் பார்த்தால் மனிதன் இறைவனைவிட ஒரு படி மேலானவன் என்று கொள்ளலாம். அவனிடம் இறைத்தன்மை எல்லாம் இருக்கின்றன (God is omnipotent). இறைவன் எல்லா ஆற்றலும் நிறைவாகப் பெற்றவன். அத்தன்மை மனிதனிடம் இருக்கின்றது (God is omniscient). இறைவன் எல்லாம் அறிந்தவன். அத்தன்மையும் மனிதனிடம் இருக்கின்றது. (God is omnipresent). இறைவன் எங்கும் இருப்பவன். மனிதனும் அந்நிலையை எய்த முடியும். ஆராய்ச்சியின் மூலமும், யோகத்தின் மூலமும் உள்ளது உள்ளபடியே தன்னுணர்வாக, அகக்காட்சியாகப் பெற்று விட்டால் மனிதன் இறைத்தன்மையை முழுமையாகப் பெறுகிறான்.

மனிதனிடம் கடவுள் எல்லாமே இருப்பதோடு கடவுளை அறிந்து கொள்ளும் பெருமையும் இருக்கிறது. இத்தகைய பெருமை அவனிடம் இருக்க அதனை மறந்து தன் உடல் அளவிலே எல்லை கட்டிக் கொண்டிருக்கிறான். இந்நிலையிலேயிருந்து விடுதலை பெற வேண்டுமானால், அவன் தன் உயிரைப் பற்றிய அறிவு பெற வேண்டும். உயிரின் தன்மை என்ன? அதன் மூலம் என்ன? பரம்பொருளே, அதன் எழுச்சி நிலையே உயிராக இருக்கிறது. இன்று இந்த உடலில் உயிர் இருந்தாலும் பரம்பொருளின் தொடர்பு அறுபடாமல் தொடர்ந்து இருந்து கொண்டுள்ளது.

உடலுக்குள் இருக்கும் உயிர், உணர்ச்சியின் அனுபோகத்தில் உடல் வரைக்கும் எல்லை கட்டிக் கொண்டு இருந்தாலும் தன் முழுமையை உணர்ந்து கொண்டால் - தன் மூலத்தையும், விபாபகத்தையும் அறிந்து கொண்டால் எல்லாவற்றிலும் தன்னையே பார்க்கின்ற ஒரு தன்மை வந்து விடுகின்றது. சிறுமை, பெருமை, தன்முனைப்பு எல்லாம் நீங்கி விடுகின்றன. இந்த நிலையில் பிறரை மதிக்கவும், ஆதரிக்கவும், பரிவு காட்டவும், மேல்நிலைக்குக் கொணரவுமான பொறுப்புணர்ச்சியைப் பெறுகிறான்.

# மாகாண சபைத் தேர்தல்கள்

35

கலாநிதி க.தவலிங்கம்,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்



| அட்டவணை 32 வடமத்திய மாகாணசபை 2012 | |
|---|---|
| A | 900,873 |
| B | 580,938 |
| C | 28,010 |
| D | 552,928 |

போட்டியிட்ட கட்சிகளில்/குழுக்களில் மூன்று கட்சிகளுக்கு மட்டுமே ஆசனங்கள் கிடைத்தன. அம்மூன்று கட்சிகளும் பெற்ற வாக்குகள், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி (338,552), ஐக்கிய தேசியக் கட்சி (196,127), மக்கள் விடுதலை முன்னணி (16,066). அவை பெற்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அட்டவணை 33 இல் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 33
வடமத்திய மாகாண சபைத் தேர்தல் -2012

| மாவட்டம் | கட்சிகள் | | | |
|---|---|---|---|---|
| | ஐமசு | ஐதேக | JVP | மொத்தம் |
| அநுராதபுரம் | 13 | 7 | 1 | 21 |
| பொலநறுவை | 6 | 4 | - | 10 |
| Bonus | 2 | - | - | 2 |
| மொத்தம் | 21 | 11 | 1 | 33 |

ஐமசுமு- ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணி, ஐதேக- ஐக்கியதேசியக்கட்சி,
JVP- மக்கள் விடுதலை முன்னணி

## 2012 ஆம் ஆண்டில் 72 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இரட்டைப் பதிவுகள் நீக்கம்

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பதிவு பட்டியலிலிருந்து இரண்டுக்கும் மேற்பட்ட வாக்காளர்களாக பதிவு செய்யப்பட்ட பதிவுகள் நீக்கப்பட்டுள்ளன. 72,319 பதிவுகளே இவ்வாறு நீக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. கொழும்பு மாவட்டத்திலிருந்து 11,359 பதிவுகளும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 9,023 பதிவுகளும், வன்னி மாவட்டத்திலிருந்து 5410 பதிவுகளும், யாழ். மாவட்டத்திலிருந்து 4067 பதிவுகளும், கண்டி மாவட்டத்திலிருந்து 4040 பதிவுகளும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 3951 பதிவுகளும் நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் திணைக்களம் அறிவித்திருந்தது. வாக்காளர் இடாப்பு பட்டியலில் இரண்டுக்கு மேற்பட்ட பதிவுகளை மேற்கொண்டிருந்தமையால் 2011 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலிலிருந்து 176, 534 பதிவுகள் நீக்கப்பட்டிருந்தன. இவ் விபரத்தை அட்டவணை 34 காட்டுகிறது.

அட்டவணை-34இரட்டைப்பதிவுகளிநீக்கம் -2011
நீக்கப்பட்ட பதிவுகளின் எண்ணிக்கை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 45,177 | அம்பாந்தோட்டை | 3,720 | அநுராதபுரம் | 5,630 |
| கம்பஹா | 20,205 | யாழ்ப்பாணம் | 7,209 | பொலநறுவை | 2,783 |
| களுத்துறை | 8,844 | வன்னி | 3,739 | பதுளை | 6,265 |
| கண்டி | 11,417 | மட்டக்களப்பு | 7,136 | மொனராகலை | 2,715 |
| மாத்தளை | 3,785 | அம்பாறை | 4,989 | இரத்தினபுரி | 3,969 |
| நுவரெலியா | 3,787 | திருகோணமலை | 5,135 | கேகாலை | 8,115 |
| காலி | 6,335 | குருநாகல் | 7,753 | மொத்தம் | 176,534 |
| மாத்தறை | 4,089 | புத்தளம் | 3,737 | | |

## 2013 மாகாண சபைத் தேர்தல்கள்

இலங்கையின் வடக்கு, மத்திய, மற்றும் வட மேல் ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கு 2013 செப்டம்பர் 21 இல் தேர்தல்கள் நடைபெற்றன. இலங்கை மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் ஒரே நாளில் நடைபெறுவதில்லை. படி நிலையிலேயே நடைபெற்று வருகின்றன. இவ் வகையில் மத்திய மற்றும் வடமேல் ஆகிய இரண்டு மாகாண சபைகளும் அவற்றின் ஆளுநர்களினால் அரசியலமைப்பின் 154 ஆ (8) உறுப்புரையின் கீழ் 2013 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 5 ஆம் திகதி கலைக்கப்பட்டன. இவ்வறிவித்தல்கள் முறையே 1817/38 மற்றும் 1817/39 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானி பத்திரிகைகளில் வெளியிடப்பட்டன.

வடக்கு மாகாணசபைக்கு இம்முறையே முதல் தடவையாகத் தேர்தல் இடம்பெற்றது. 2013.07.05 ஆம் திகதி 1988 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க மாகாண சபைகள் தேர்தல் சட்டத்தின் 10(1) ஆம் பிரிவின் கீழ் வடக்கு மாகாண சபையை நிறுவுவதற்கான வாக்கெடுப்பொன்றை நடத்துவதற்கு அரசியல் அமைப்பின் 154 (அ)(2) ஆம் உறுப்புரைக்கமைய ஜனாதிபதியால் CSA 9/2/8 இலக்க கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டது.

இதற்கிணங்க, தேர்தல்கள் ஆணையாளரால் இம் மூன்று மாகாணசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் 2013 ஜூலை 25 முதல் ஓகஸ்ட் 1 வரை ஏற்றுக்கொள்ளப்பட்டன. 210 வேட்புமனுக்கள் (பதிவுசெய்யப்பட்ட கட்சிகளில் இருந்து 131 மனுக்களும், சுயேட்சைக் குழுக்களிடம் இருந்து 79 மனுக்களும்) தாக்கல் செய்யப்பட்ட நிலையில், 201 வேட்புமனுக்கள் (அரசியல் கட்சிகளின் 126 உம், சுயேட்சைக்குழுக்களின் 75 உம்) ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டணி, ஐக்கிய தேசியக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணிஆகியன அனைத்துப் 10 மாவட்டங்களிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களிலும் போட்டியிட்டன. ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஏழு மாவட்டங்களில் தனித்தும் ஏனையவற்றில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியில் இணைந்தும் போட்டியிட்டன.

3 மாகாண சபைகளுக்கும் 148 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் வாக்களிப்பதற்கு 2012 ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலின் படி வடக்கில் 714, 488 பேரும், வடமேல் மாகாணத்தில் 1,754,218 பேரும், மத்திய மாகாணத்தில் 1,889,557 பேரும் தகுதி பெற்றிருந்தனர். யாழ்.மாவட்டத்தில் 426,703 பேரும், கிளிநொச்சியில் 68,589 பேரும், மன்னாரில் 72, 420 பேரும், வவுனியாவில் 94, 367 பேரும், முல்லைத்தீவில் 52,409 பேரும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். இந்த 148 உறுப்பினர்களை தெரிவு செய்வதற்காக நடைபெற்ற தேர்தலில் வடக்கிலிருந்து 38 உறுப்பினர்களும், மத்திய மாகாணத்திலிருந்து 58 பேரும், வடமேல் மாகாணத்திலிருந்து 52 பேரும் தெரிவாகினர். வடமாகாணத்தில் தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு 30 இடங்களைக் கைப்பற்றி ஆட்சியமைத்தது. மத்திய, வடமேல் மாகாண சபைகளை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணிகைப்பற்றியது. ஒவ்வொரு மாகாண சபைத் தேர்தல் பற்றியும் தனித்தனியாகப் பார்ப்போம்.

### வடமேல் மாகாணசபைத் தேர்தல்-2013

வடமேல் மாகாணத்தில் 13 அரசியல் கட்சிகளும் 12 சுயேச்சைக் குழுக்களும் குருநாகல் மாவட்டத்திலும், 12 அரசியல் கட்சிகளும் 11 சுயேச்சைக் குழுக்களும் புத்தளம் மாவட்டத்திலும் போட்டியிட்டன. தெரிவு செய்யப்பட வேண்டிய உறுப்பினர்களின் எண்ணிக்கை 52, இரண்டு Bonus உறுப்பினர்களுடன்ஆகும்.2013 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதி மாகாணசபைக்கான தேர்தல் நடைபெற்றது.

போட்டியிட்ட கட்சிகள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக்கட்சி, ஜனநாயக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனசெத பெரமுன, தேசிய ஐக்கிய அமைப்பு, நமது தேசிய முன்னணி, தேசப்பற்றுள்ள தேசிய முன்னணி, எக்ஸத் லங்கா மஹா சபா, எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய, ருஹூணு ஜனதா பக்சய, ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி, மற்றும் சுயேச்சை குழுக்கள் ஆகியனவாகும்.எக்ஸத் லங்கா பொதுஜன பக்சய புத்தளம் மாவட்டத்தில் போட்டியிடவில்லை.

இத் தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (A), அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை (B), நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை(C), செல்லுபடியான வாக்குகளின் எண்ணிக்கை (D) அட்டவணை 35 இல் தரப்பட்டுள்ளது.

| அட்டவணை 35 வடமேல் மாகாணசபை 2013 | |
|---|---|
| A | 1,754,218 |
| B | 1,114,702 |
| C | 53,215 |
| D | 1,061,487 |

(தொடரும்...)

## 2,641...

யாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 485,302 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன், கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 1,579 பேர் நேற்று குணமடைந்து வீடு திரும்பினர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 412,812 ஆக அதிகரித்துள்ளது. (ஞா)

## 144...

மேலும் 144 பேர் உயிரிழந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்துள்ளவர்களில் 77 ஆண்களும் 67 பெண்களும் உள்ளடங்குகின்றனர்.

அந்த வகையில், 30 வயதுக்கு கீழ்ப்பட்டவர்களில் ஒரு பெண்ணும் 30 தொடக்கம் 59 வயதுக்கிடைப்பட்டவர்களில் 16 ஆண்களும் 05 பெண்களுமாக 21 பேரும் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 61 ஆண்களும் 61 பெண்களுமாக 122 பேரும் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், நாட்டில் கொரோனாத் தொற்றுக் காரணமாக உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 11,296 ஆக உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## தகனச் செலவை...

வுள்ளதாக இராஜாங்க அமைச்சர் ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கோவிட் மரணங்கள் தகனம் செய்வதற்காக செலவாகும் 5 ஆயிரம் ரூபாய் பணத்தை அரசாங்கத்தின் மூலம் ஏற்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய கடந்த ஒகஸ்ட் மாதம் 31ஆம் திகதி இடம்பெற்ற 2,417 மரணங்களுக்காக அரசாங்கத்தினால் 120 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் அனைத்து மாகாணங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அந்த பணம் செலவிடப்பட்டுள்ளதாக ரொஷான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு மரணங்களுக்கும் 5 ஆயிரம் ரூபாய் வரையில் செலவிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஞா)

## இலங்கைக்கு...

இதன் காரணமாக ஐ.நாவில் இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக பிரேரணைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்புக்களே அதிகமுள்ளன.

இது நாட்டின் எதிர்காலத்திற்கு பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் சபை இலங்கையில் அண்மைக்காலமாக இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தவறுகளை திருத்திக்கொள்வதற்கு காலஅவகாசத்தை வழங்கியது.

எனினும் அரசாங்கம் அதனை கவனத்தில் கொள்ளவில்லை. இதனால் 2015ஆம் ஆண்டுக்கு முன்னரைப்போன்று இலங்கைக்கு எதிராக தொடர்ச்சியாக பிரேரணைகளை நிறைவேற்றக்கூடிய வாய்ப்புகள் உள்ளன. இது நாட்டின் எதிர்காலத்திற்கு பாரிய அச்சுறுத்தலாக அமையும் என குறிப்பிட்டுள்ளார். (ஞா)

## பேரவையின்...

முதல்நாள் நிகழ்ச்சிநிரலில் இலங்கை குறித்த விவகாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் மிசெல் பச்செலெட், அமர்வின்போது இலங்கை குறித்த வாய்மொழி அறிவிப்பை முன்வைக்கவுள்ளார்.

மேலும் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் மற்றும் நிரந்தர சிறப்புரிமைகள் கொண்ட அமைப்புகளுக்கு கருத்து தெரிவிக்க வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளை, பதிலளிப்பதற்கான சந்தர்ப்பம் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ளது.

30/1 தீர்மானத்திலிருந்து விலகியமை உள்ளிட்ட பல நடவடிக்கைகளினால் இலங்கை முழு அளவில் பொறுப்புக் கூறலுக்கான கதவுகளை அடைத்துள்ளதாக ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் குற்றம் சுமத்தியுள்ள நிலையில், ஜெனிவாவின் 46/1 தீர்மானமானது இலங்கையை தனிமைப்படுத்தும் என்பதோடு வெளியக தகவல் சேகரிப்பு பொறிமுறைகளை முற்றிலும் நிராகரிப்பதாகவும் இத்தகையதொரு சர்வதேச கவனம் இலங்கை மீது தேவையற்றது என்பதை ஐ.நா மனித உரிமைகள் பேரவைக்கு இம்முறை அனுப்பி வைத்துள்ள விளக்கமளிப்பில் அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை அரசாங்கம் இம்முறை ஜெனிவாவிற்கு அனுப்பி வைத்துள்ள விளக்கமளிப்பில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளின் முன்னேற்ற நிலைமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை மக்களின், குறிப்பாக வடக்கு - கிழக்கைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம், சிங்கள மக்களின் உயிர் வாழ்வதற்கான உரிமை உள்ளிட்ட அடிப்படை உரிமைகளை துளப்துரங்களாக இல்லாது செய்த தீவிரவாதத்தை ஒழித்தோம்.

நாட்டில் சமாதானத்தையும் ஸ்திரதன்மையையும் ஏற்படுத்தியதுடன் மோதலுக்கு பின்னரான நல்லிணக்கம்சார் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களை மீளக் குடியமர்த்தல், மில்லியன் கணக்கான மிதிவெடிகள் மற்றும் வெடிக்காத படைக்கல பொருட்களை அகற்றுதல், இராணுவ கட்டுப்பாட்டு காணிகளை விடுவித்தல், ஜனநாயக ரீதியிலான தேர்தல்களை நடத்துதல், பொறுப்புக்கூறல் மற்றும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் பல ஜனாதிபதி ஆணைக்குழுக்களை நியமித்தல், சிறுவர் படைவீரர்கள் மற்றும் முன்னாள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க போராளிகளுக்கு புனர்வாழ்வளித்தல், பாரியளவிலான உட்கட்டமைப்பு அபிவிருத்திகளை மேற்கொள்ளல், வாழ்வாதார வாய்ப்புக்களை ஊக்குவித்தல் மற்றும் மோதலினால் பாதிக்கப்பட்ட மற்றும் விடுவிக்கப்பட்ட இடங்களில் பொருளாதார நடவடிக்கைகளை ஆரம்பித்தல் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மோதல்களின் பின்னணியில் எழுகின்ற சவால்களை பொறுத்தவரையில் குறிப்பாக மோதலுக்கு பின்னராக எஞ்சியுள்ள பிரச்சினைகள் எந்தவொரு சமூகத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வண்ணம் சர்வதேச சமூகத்தின் உதவியுடன் நீதியாகவும் நல்லிணக்கத்துடனும் தீர்க்கப்பட வேண்டும்.

இழப்பீடுகளை வழங்குவதற்கும் காணாமலாக்கப்பட்டோரை கண்டறிவதற்கும் பொறுப்புக்கூறலுடனான செயற்பாடுகளை முன்னெடுத்தல், தேசிய நல்லிணக்கம், ஒற்றுமை மற்றும் சகல மக்களினதும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுதல் போன்றவற்றை உறுதி செய்ய சுயாதீன நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஞா)

## ஐ.நா கூட்டத்...

இன்று ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 48ஆவது கூட்டத்தொடரானது எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 8ஆம் திகதி வரையில் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்துவது தொடர்பான தீர்மானமானது ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் 46ஆவது கூட்டத்தொடரின் போது நிறைவேற்றப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்திற்கு அமைவாக இலங்கையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் குறித்த வாய்மூல அறிக்கையினை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சல் பட்ச்லெட்டினால் இன்று ஆரம்பமாகவுள்ள கூட்டத்தொடரில் முன்வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அது தொடர்பான உறுப்பு நாடுகளின் விவாதமானது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் தொடர்பான விடயங்கள் குறித்து இந்த நாடுகள் கேள்விகளை எழுப்பலாம். மறுபுறம் ஏற்கெனவே வலியுறுத்தப்பட்ட சர்வதேச பொறிமுறைக்கான அழுத்தங்களும் காணப்படும் என கணிக்கப்படுகின்றது.

அதேபோன்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் இணையவழியாக கலந்துகொண்டு உரையாற்றவுள்ளார்.

இதன்போது தேசிய நல்லிணக்கம், காணாமல்போனோர் விவகாரம் மற்றும் நட்டாடு வழங்குதல், பயங்கரவாத தடைச் சட்டம், மனித உரிமை நிலைவரம் மற்றும் அரசியல் தீர்வு விவகாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் குறித்தும் விளக்கமளிக்கவுள்ளார்.

இந்த நிலைப்பாடு கொழும்பில் உள்ள அனைத்துலக இராஜதந்திர மையங்களுக்கும் ஏற்கெனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## மயங்கி விழுந்த...

இதில் வல்வெட்டித்துறை நெடியகாடு பகுதியிலுள்ள 3 பிள்ளைகளின் தாயான ஸ்ரீ ராஜேந்திரன் சந்திரவதனா (வயது -68) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பப் பெண் நேற்றுக்காலை முச்சக்கரவண்டி ஒன்றில் கொட்டடியிலுள்ள அம்மன் கோயிலுக்கு சென்று அங்கு வழிபாடுகளை மேற்கொண்டிருந்தபோது திடீரென மயங்கி விழுந்து அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

இவருக்கு பிசிஆர் பரிசோதனை முன்னெடுப்பதற்காக சடலம் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## கொரோனாவால்...

இம்மானுவேல் ராஜன் மரியரெஸ்ரா (வயது-36) என்ற 7 மாதக் கர்ப்பவதியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த கர்ப்பவதிப் பெண் கடந்த முதலாம் திகதி காய்ச்சல் காரணமாக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் சிகிச்சை பலனின்றி நேற்று முன்தினம் அவர் உயிரிழந்துள்ளார்.

எனினும் குறித்த பெண்ணுக்கு கொரோனாத் தொற்றுள்ளது என மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## கடந்த 11...

கொரோனாத் தொற்றினால் மரணமடைந்துள்ளனர்.

நாட்டில் ஏற்படும் மரணவீதத்தில் வவுனியாவில் மரணிப்போரின் தொகை பாரியளவில் காணப்படுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 3,328 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 50 பேர் மரணமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## வடக்கில் 5 பேர்...

இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

இதில் 50 வயதுடைய ஆண் ஒருவரும் கர்ப்பவதிப் பெண்ணொருவரும் இவ்வாறு கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர்.

கிளிநொச்சியில் உயிரிழந்த இருவருக்கு நேற்று கொரோனாத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிசிஆர் பரிசோதனையில் அவர்கள் இருவருக்கும் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்கள் 94 மற்றும் 84 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட பகுதியில் நேற்றைய தினம் ஒருவர் கொரோனாத் தொற்றினால் மரணமடைந்துள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த நபர் சுகவீனம் காரணமாக புதுக்குடியிருப்பு வைத்தியசாலையில் நேற்று முன்தினம் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அவரிற்கு முன்னெடுக்கப்பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து மாஞ்சோலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று 2ஆம் வட்டாரம், கைவேலிபகுதியைச் சேர்ந்த 77 வயதுடையவரே மரணமடைந்துள்ளார்.

குறித்த மரணத்துடன் புதுக்குடியிருப்பு சுகாதார வைத்திய அதிகாரிபணிமனைக்குட்பட்ட பகுதியில் இதுவரை 15 மரணங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஞா)

## பொம்மைவெளி...

இவ்வாறு உயிரிழந்தவராவார்.

குறித்த குடும்பஸ்தர் பால் வியாபாரம் செய்வதற்காக நேற்று முன்தினம் வீதியிலிருந்து மறுகரைக்கு சென்றபோது (அராலி வீதியில்) மோட்டார் சைக்கிளில் மோதி விபத்துக்குள்ளாகி சம்பவ இடத்திலேயே அவர் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்ததுடன் மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ஞா)

## வேலைக்கு ஆள் தேவை

தோட்ட வேலை தெரிந்த பெண் வேலையாள் தேவை.
இடம் - நெல்லியடியை அண்மித்துள்ளவர்கள்.
நேரம் - காலை 8.00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை
(C-2642)

**076 714 8059**

## காணி விற்பனைக்கு

யாழ். நல்லூர் - செம்மணி பிரதான வீதியில்
நாயன்மார்கட்டில் பிரதான வீதியின் முகப்புடன்
7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
பிரித்தும் வழங்கப்படும்.
(7893)

தொடர்பு **077 288 0152**
**077 623 4204**

The best opportunity for the limited students

## Diploma in English

- Fluency of Spoken Practice and Examination
- Writing experience with proper guidance
- Recognized Diploma in English within Six months
- Conducted by CALSDA

Free Seminar Via Zoom on 15.09.2021 At 7.00 p.m. to 7.30 p.m.

For
- Primary Teachers of English
- Adult learners and
- Students Expecting higher studies

Duration : Six months

Under the Colombo Academy of Language skills and Dramatic Art

**For contact : 077 788 0330**
**Zoom ID : 9975566299**
**Passcode : 1234**

**Dr. Siva Muguntthan**
Lecturer of English - Jaffna
(C-2648)

## பண்ணை பராமரிப்பாளர் தேவை

யாழ். புறநகர் பகுதியில் இயங்கும் பண்ணையில்
தங்கி இருந்து வேலை செய்வதற்கு
வேலையாள் தேவை.
தகுந்த சம்பளம், உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.
(7890)

**075 038 8388**

**வலம்புரி** விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603, 021 567 1532**

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**வல்லிபுரம் குமாரசாமி**

தோற்றம் 11.04.1933
மறைவு 04.09.2019
திதி : 12.09.2021

எம் நினைவோடு நினைவாகி
எம் உணர்வோடு உணர்வாகி
எம் உயிரோடு உயிராகக் கலந்த
எம் ஆருயிர்த் தந்தையே!

என்றும் உம் நெஞ்சுருகும் நினைவோடு
திங்கள் இருபத்து நான்கில் உம்
திருப்பாதம் மலர் தூவி வணங்குகிறோம்!

விநாயகர் வீதி, நல்லூர் வடக்கு,
யாழ்ப்பாணம்.
(7891)
குடும்பத்தினர்

இலங்கை உட்பட
### 15 நாடுகளுக்கான
# தடை நீக்கம்

(கொழும்பு)

இலங்கை உள்ளிட்ட 15 நாடுகளுக்கு விதித்திருந்த சுற்றுலாத் தடையை இன்று முதல் நீக்குவதாக ஐக்கிய அரபு இராச்சியம் அறிவித்துள்ளது.

இதற்காக உலக சுகாதார ஸ்தாபனத்தின் அனுமதிபெற்ற கொரோனாத் தடுப்பூசிகளை இரண்டு தடவையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இலங்கை, இந்தியா, பாகிஸ்தான் உள்ளிட்ட 15 நாடுகளுக்கு இந்த தடை விதிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை, முழுமையான தடுப்பூசிகளை பெற்றுக் கொண்ட சுற்றுலாப் பயணிகளை பாங்கொக்கிற்குள் அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்த அனுமதி வழங்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

(ம-03)

# கண்ணீர் அஞ்சலி

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் புகழ்பூத்த
பழைய மாணவர்களில் ஒருவரும்
ஓய்வுபெற்ற நில அளவை அத்தியட்சகருமான



அமரர்
**செல்லத்துரை சுப்பிரமணியம்**
(சமாதான நீதிவான்)

மலர்வு : 1937.10.07
உதிர்வு : 2021.09.10

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும்
அன்னாரின் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு
அன்னாரின் ஆத்மா
வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகரின்
பாதார விந்தங்களில் சாந்தியடைய
எல்லாம்வல்ல விநாயகப் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!

யா / வைத்தீஸ்வராக் கல்லூரியின்
பழைய மாணவ நண்பர்கள்
(7889)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.